பக்கங்கள் : 18+VIII=26

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 27 ஞாயிற்றுக்கிழமை (12-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:292

### எதிர்க்கட்சித் தலைவருடனான சந்திப்பில் ஜனாதிபதி முன்மொழிந்த

# தேசிய ஆலோசனைச் சபை யோசனை: ஐக்கிய தேசியக் கட்சி நிராகரிக்கும்!

## பேச்சைத் தொடங்காமல் காலங்கடத்த ஜனாதிபதி தந்திரம் எனக் குற்றச்சாட்டு

கொழும்பு,செப்ரெம்பர்12

**சமாதானம் மற்றும் நல்லிணக்கத்துக்கான தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் ஒன்றை உருவாக்கும் அரசின் யோசனையை ஐக்கிய தேசியக் கட்சி நிராகரிக்கும் என்று அக்கட்சியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.**

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இந்த யோசனை, விடுதலைப் புலிகளுடனான சமாதான முயற்சிகளை ஆரம்பிக்காது காலங்கடத்துவதற்கான ஒரு தந்திரம் என்று கட்சி உயர் மட்டம் கருதுவதாக ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.**

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வியாழக்கிழமை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துத் தேசிய விடயங்கள் மற்றும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்து சுமார் ஒரு மணிநேரம் பேச்சு நடத்தியிருந்தார்.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக அரசியல் கட்சிகள் மற்றும் மதத் தலைவர்கள், சிவில் சமூகக் குழுக்கள் போன்ற தரப்புகளுடன் ஆலோசனை கலக்கும் வசதியை ஏற்படுத்தும் நோக்கில் தேசிய ஆலோசனைக் கவுன்ஸில் ஒன்றை உருவாக்குவது என்ற யோசனையை அப்போது ஜனாதிபதி எதிர்க்கட்சித் தலைவரிடம் வெளியிட்டார்.

தேசிய ஆலோசனைக் கவுன்ஸிலை உருவாக்கும் அரசின் யோசனையை ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி அப்போது விளக்கியிருந்தார்.

அரசின் இந்த யோசனையை எதிர்க்கட்சித்

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஊர்காவற்றுறையில் நேற்றுமாலை ஈ.பி.டி.பி. உறுப்பினர் சுட்டுக்கொலை!

யாழ்ப்பாணம்,செப்.12

ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்றுமாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் உயிரிழந்தார்.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ஆறுமுகம் அருள்தாசன் (வயது 25) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஊர்காவற்றுறையில் உள்ள ஈ.பி.டி.பி. முகாமுக்குச் சமீபமாக வைத்து இனந்தெரியாத நபர் ஒருவர் இவரைச் சுட்டுக்கொன்றார் என்று தெரிவிக்கப்படுகிறது.

நெஞ்சில் சுடப்பட்ட இவர் உடனடியாக ஊர் காவற்றுறை ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டவேளை உயிரிழந்தார்.

சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

கொலையுண்ட நபர் ஈ.பி.டி.பியின் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-13)

## கழுத்துவெட்டிக் கொல்லப்பட்டவர் இராணுவத்தின் உளவாளியாம்!

கொழும்பு,செப்.12

நாயன்மார்கட்டுப் பகுதியில் கடந்த செவ்வாயன்று கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்ட நவரட்ணராஜா பிறேம்குமார் என்ற இளைஞன் இராணுவத்துக்குத் தகவல்களை வழங்கி வந்தவர் என்று இராணுவப் பேச்சாளரை மேற்கோள்காட்டி "லங்கா அக்கடமிக்" இணையச் செய்தித்தளம் தகவல் வெளியிட்டிருக்கின்றது.

25 வயதான இந்த இளைஞர் விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் அவர்களது அலுவலகம் ஒன்றுக்கு விசாரணைக்காக அழைக்கப்பட்டிருந்தார் என்றும் - ஆனால் பின்னர் அவர் காணாமற்போய்விட்டார் எனவும் -

இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா கூறினார் என்று அந்த இணையத் தளச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-3-13)

## அகாஷி வருகிறார்

கொழும்பு,செப்.12

ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி இலங்கை நிலைவரம் தொடர்பாக அறிவதற்காக அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார்.

ஜப்பானுக்கு விஜயம் மேற்கொண்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்த விடயங்கள் தொடர்பாக நேரில் அறிவதே அவரது விஜயத்தின் நோக்கம் எனக் கூறப்படுகின்றது. (16ஆம் பக்கம் பார்க்க)

## பிக்குமார் ஆர்ப்பாட்டம்

கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக நூற்றுக்கு மேற்பட்ட பௌத்த பிக்குமார் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அமெரிக்காவில் 'ஹொலிவூட் புத்தா' என்ற பெயரில் தயாரிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் சினிமா திரைப்படத்தின் சுவரொட்டிகளுக்கு ஆட்சேபம் தெரிவித்தே ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

அந்தச் சுவரொட்டிகள் பௌத்த மதத்தைப் புண்படுத்தும் வகையில் அமைந்துள்ளன எனத் தெரிவித்து தமது கண்டனத்தை வெளிக்காட்ட பிக்குகள் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் மகஜர் ஒன்று தூதரகத்தில் கையளிக்கப்பட்டது. (ஐ-3)

## தெற்கு செய்தியாளர் குழு இன்று வடக்கே வருகிறது

யாழ்ப்பாணம்,செப்.12

தென்னிலங்கையைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட செய்தியாளர்கள் அடங்கிய குழுவினர் இன்று வடக்கே வருகின்றனர்.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் அந்தப் பேரவையின் தலைவர் ஜெகான் பெரேரா தலைமையில் இவர்கள் வருகின்றனர்.

பிராந்தியச் செய்தியாளர்களாகப் பணிபுரியும் 40 பேரும் கொழும்பு ஊடகங்களில் பணிபுரியும் 10 பேரும் இக்குழுவில் இடம்பெறுகின்றனர்.

கொழும்பிலிருந்து இன்று வடக்கு நோக்கிப் புறப்படும் இக்குழுவினர் இன்றும் நாளையும் வன்னியில் தங்கி நிற்பர். அச்சமயம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடுவர். அதன் [illegible] களில் யாழ்ப்பாணத்தில் தங்கவிருக்கும் இக்குழுவினர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் மற்றும் புத்திஜீவிகளைச் சந்தித்துக் கலந்துரையாடுவர். (ஐ-3)

## கச்சதீவிலிருந்து மீட்கப்பட்டோர் சொந்த இடங்களுக்குத் திரும்பினர்

யாழ்ப்பாணம்,செப்.12

தமிழ்நாட்டிலிருந்து திரும்பிய வழியில் கச்சதீவில் ஐந்து தினங்கள் நிர்க்கதி நிலையில் விடப்பட்டுப் பின்னர் மீட்கப்பட்ட 28 பேரும் அவரவர் சொந்த இடங்களுக்கு நேற்று அனுப்பப் பட்டனர்.

இந்திய மீனவர்களால் படகு மூலம் அழைத்து வரப்பட்டு கச்சதீவில் இறக்கப்பட்ட இவர்கள் யாழ். அரச அதிபரின் ஏற்பாட்டில் அங்கிருந்து மீட்கப்பட்டு நேற்றுமுன்தினம் நெடுந்தீவுக்கு அழைத்துவரப்பட்டிருந்தனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே ஞாயிறுவெளிச்சம் இணைப்பிதழில்

★ மனிதர்களைப் பிடித்து விற்று குபேர பூமிகளான மேற்கு நாடுகள்.

★ யாழ்ப்பாணம்: ஒரு பீனிக்ஸ் பறவையின் குரல்...

★ இளைஞர்களின் வலுவாற்றலுக்கு தடையாக நிற்கும் சினிமா...

★ ரஷ்யாவை உலுக்கிய மனிதப் பேரவலம்..! - படத் தொகுப்பு

★ தாகமே உயிரின் ராகம் - அப்துல் ரகுமான்

★ வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட வெற்றிலை,பாக்கு, சுண்ணாம்பு...

இவைகளுடன்....
கடுகுக் கதை, கவிதைகள், நினைக்க சிந்திக்க, யாரொடு நோவோம், முத்தான மூத்தவர்கள்...

## கண்டியில் கோரவிபத்து நால்வர் மரணம்!

கண்டி,செப்.12

கண்டி நகரில் நேற்றுக்காலை இடம்பெற்ற வீதிவிபத்து ஒன்றில் மலையகத் தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உயிரிழந்தனர்.

பயணிகள் பஸ் ஒன்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. இந்த இரு வாகனங்களுக்கு இடையில் சிக்கி ஒட்டோ ஒன்று நசியுண்டு பலத்த சேதமடைந்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தை அடுத்து மினிபஸ் நொறுக்கப்பட்டது

வலி.கிழக்கு,செப்.12

பருத்தித்துறை வீதியில் கல்வியங்காடு 3ஆம் கட்டைப் பகுதியில் நேற்று மாலை 7மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவம் ஒன்றை அடுத்து ஆத்திரம் அடைந்த சிலர் மினிபஸ் ஒன்றின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறையை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போக்குவரத்

(16ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சிப்பாய் தற்கொலை!

வவுனியா,செப்.12

வவுனியா, பம்பைமடு முன்னரங்கக் காவல் நிலையில் பணியில் இருந்த சிப்பாய் ஒருவர் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்துள்ளார்.

கண்டி, மனிகதிவெலவைச் சேர்ந்த விஜயக்கோன் (வயது-27) என்ற சிப்பாயே தற்கொலை புரிந்துள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்ட வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியன், சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டு, விசாரணையை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.(ஐ-3-13-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# 'ஒலிம்பிக் கோலாகலம்' பரிசளிப்பு விழா காட்சிகள்....













நேற்று உதயன் பணிமனையில் நடைபெற்ற பாரதி விழா மற்றும் 'ஒலிம்பிக் கோலாகலம்' பரிசுப் போட்டியின் வைபவத்தில் எடுக்கப்பட்ட படங்களையே இங்கே காண்கிறீர்கள். முத்த எழுத்தாளரும் பிரதம பேச்சாளருமாகிய பொன்.கனேசமூர்த்தி 'வள்ளுவமும் பாரதியும்' என்னும் தலைப்பில் சிறப்புரையாற்றுவதையும் 'பாரதி தமிழ் உணர்வு நிறைந்தவரா? தேசப்பற்று நிறைந்தவரா' என்னும் தலைப்பில் ஆசிரியர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற பட்டி மண்டபத்தில் ஒரு காட்சியையும் முதலிரு படங்களிலும் காணலாம். யாழ். மின்னகம் வழங்கிய முதலாவது பரிசைப் பெறும் ஜீ.சுபன், பிறவுண் அன் நிறுவனம் வழங்கிய இரண்டாவது பரிசைப் பெறும் சிவானந்தன் சுனக்ஷன், சீடில்ஸ் வழங்கிய மூன்றாம் பரிசைப் பெறும் ஜெயசுதர்ஜினி இராஜதுரை, பவர் செலுலர் நிறுவனம் வழங்கிய நான்காம் பரிசைப் பெறும் ரஜனி தவநடராசா, ஐ.ஐ.எஸ்.நிறுவனம் வழங்கிய ஐந்தாம் பரிசைப் பெறும் பொன்ராசா புருஷோத்தமன், யமஹா பிளாஸா நிறுவனம் வழங்கிய ஆறாம் பரிசைப் பெறும் மதன் விதூசனன் ஆகியோரையும் சிவகணேசன் ஸ்ரோர்ஸ் வழங்கிய ஆறுதல் பரிசைப் பெறும் ஒ[illegible]வரையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். *(படங்கள் : தேவா)*

## வடமராட்சி கிழக்கில் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,செப்.12

தேசிய சேமிப்பு வங்கியின் வெள்ளி விழாவை முன்னிட்டு வடமராட்சி கிழக்கில் நடமாடும் சேவை ஒன்றை இன்று ஞாயிற்றுக்கிழமை நடத்தவுள்ளது.

பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர் ரி.பரமானந்தம் தலைமையில் நடைபெறும் இச்சேவை உடுத்துறை மகா வித்தியாலயம், மருதங்கேணி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, செம்பியன்பற்று அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆகிய இடங்களில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

கிராம மட்டத்தில் சேமிப்பை ஊக்குவிக்கும் நோக்கில் நடத்தப்படும் இச்சேவையில் சிறுவர் சேமிப்புக் கணக்கு, இளைஞர் சேமிப்புக் கணக்கு, மகளிர் சேமிப்புக் கணக்கு, நிரந்தர வைப்புக் கணக்குப் போன்ற கணக்குகள் மக்கள் மத்தியில் அறிமுகப்படுத்தப்படும்.(3-15)

## உதைபந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான கலந்துரையாடல்

வலி.வடக்கு,செப்.12

யாழ். மாவட்ட உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 10 மணிக்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

அனைத்து அங்கத்தவர்களையும் கலந்துகொள்ளும்படி செயலாளர் வேண்டியுள்ளார். (3-86)

### தமிழீழ மீட்புநிதி

**தமிழீழ மீட்புநிதி மீளளிப்புக்காகத் தெரிவுசெய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல் நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை முதல் தொடர்ந்து உதயனில் வெளியாகும் என்பதை வாசகர்களுக்கு அறியத்தருகிறோம்.**

—— இந்தியாவிலிருந்து ——

# நாடு திரும்பும் ஈழ அகதிகளுக்கு பல்வேறு உதவித் திட்டங்கள்

யாழ்ப்பாணம்,செப்.12

புலம்பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பு (ஐ.ஓ.எம்.) இந்தியாவிலிருந்து நாடு திரும்பியவர்களுக்குப் பல்வேறு வகையான உதவித் திட்டங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த உதவித் திட்டங்களை வழங்குவதற்கு ஏதுவாக இந்தியாவில் இருந்து விமானம் மூலமாகவும், படகுகள் மூலமாகவும் தாயகம் திரும்புவோரின் விவரங்களைப் பதிவுசெய்யும் நடவடிக்கைகளை அந்த அமைப்பு மேற்கொண்டு வருகிறது.

கிராமங்களுக்கான போக்குவரத்து வசதி, உணவுப் பொருள்களற்ற அத்தியாவசிய நிவாரணப் பொருள்கள் வழங்கல், இலவச மருத்துவ பரிசோதனை உதவி மற்றும் உள நல ஆலோசனை வழங்கல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான நெல் மற்றும் உப உணவுப் பயிர்ச்செய்கைக்கான உதவி, மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, மேசன், தச்சு வேலைகளை மேற்கொள்வதற்கான உபகரணங்களையும் இதர வசதிகளையும் செய்துகொடுத்தல், தொழில் வாய்ப்புக்கான தொடர்புகளை ஏற்படுத்தல், தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்கல், முழுச் சமூகமும் பயன்பெறும் வகையில் விவசாயக் கிணறு, முன்பள்ளி, விற்பனை நிலையம், சமூக நிலையம் மற்றும் அரிசி ஆலை ஆகியவற்றை அமைத்துக்கொடுப்பது போன்ற உதவிகளை இந்த அமைப்பு வழங்கவுள்ளது.

பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் கோயில் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள புலம் பெயர்தல் தொடர்பான சர்வதேச அமைப்பின் (ஐ.ஓ.எம்.) கிளையுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(805)

# அடிப்படை உரிமை மீறல் மனு அப்துல் காதர் எம்.பி. தாக்கல்

கொழும்பு,செப்.12

கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியான அப்துல் காதர், தமது அடிப்படை உரிமை மீறப்பட்டதாக, உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். ஒரு கோடி ரூபா நஷ்டஈடும் அவர் கோரியுள்ளார்.

இந்த வழக்கில், பிரதிவாதிகளாகக் குற்றத் தடுப்புப் பிரிவிற்கான பிரதிப் பொலிஸ் அத்தியட்சகர் சீ.ஈ.வெதசிங்க, அதே பிரிவின் பொறுப்பதிகாரி ருவன் குணசேகர, பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அத்தோடு, முறையற்ற விதத்தில் தம்மைக் கைதுசெய்த பொலீஸார் தன்னை அகௌரவப் படுத்தி அவமானப்படுத்தினர் என்றும் மனிதாபிமானமற்ற முறையில் தம்முடன் நடந்துகொண்டனர் எனவும் அவர் தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்த சமயம் காரணமில்லாது தமது தொலைபேசித் தொடர்பையும் பொலீஸார் துண்டித்தனர் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நடவடிக்கைகளால் தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்றும் அப்துல் காதர் எம்.பி. தமது மனுவில் தெரிவித்துள்ளார்.

(க)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம்,செப்.12

அரியாலை சனசமூக நிலையத்தின் 55ஆவது ஆண்டு நிறைவினை முன்னிட்டு ஓல் பாக் ரெஸ்ரோறன்ட் ஆதரவுடன் மின்ஒளியில் நடத்தப்படும் 4 பேர் பங்குகொள்ளும் கரபந்தாட்டப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ இரவு 7 மணி - அரியாலை சனசமூக நிலைய 'ஏ' அணி எதிர் சுண்டுக்குழி சனசமூக நிலைய 'பி' அணி.

★ இரவு 8 மணி - விக்ரம் வி.க. அணி எதிர் அணி ஜெற்லைனர் வி.க. 'ஏ' அணி.

★ இரவு 9 மணி - அருணோதயா வி.க. அணி எதிர் கொய்யாத்தோட்ட வி.க. 'பி' அணி.

(3-190)

## சமய சந்நிதியில்

வடமராட்சி,செப்.12

சரித்திரப் பிரசித்திபெற்ற வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 17 தினங்கள் பெருந்திருவிழா இடம்பெறும்.

எதிர்வரும் 27ஆம் திகதி திங்கட்கிழமை ரதோற்சவமும், மறுநாள் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சமுத்திரத் தீர்த்தமும், அதற்கு அடுத்தநாள் 29ஆம் திகதி புதன்கிழமை கேணித்தீர்த்தமும் நடைபெறுவதுடன் பெருந்திருவிழா நிறைவுறும் (3-173)

★ ★ ★

திருநெல்வேலி பலாலி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ காயத்திரி காமகோடி ஆண்கள் குருகுலத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஒன்றரை அடி உயரமான அம்மன் சிலை பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது.

இப்பிரதிஷ்டையின் பின்னர் 108 சமித்துக்கள் மூலம் யாகம் வளர்த்து அபிஷேகமும் பூசைகளும் நடைபெற்று 12 மணியளவில் மகேஸ்வர பூஜையும் இடம்பெறும். (3-29-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## அனுபவப் பாடங்களை இந்தியா மறக்காமல் இருப்பது நல்லது

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உத்தேசப் பாதுகாப்பு ஒப்பந்தம் பெரும்பாலும் அடுத்தமாத இறுதியளவில் கைச்சாத்தாகும் எனச் செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

இதுவெறும் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தமே என்று இலங்கை, இந்திய அரசுகள் கூறினாலும், இது இரு நாட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம் என்பதில் சந்தேகமே இல்லை.

இந்தப் பிரதேசத்தின் வல்லாதிக்க நாடு ஒன்றோடு இவ்வாறு இராணுவ ரீதியில் இலங்கை அரசு கைகோர்ப்பது இங்கு உள்நாட்டில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியது.

இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் இணக்கத்தீர்வு காண்பதற்கு வசதியாக இலங்கை அரசுத்தரப்பும், விடுதலைப் புலிகள் தரப்பும் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்துள்ளதுடன், அதற்கு அமைவாக யுத்தநிறுத்தத்தையும் பேணி வருகின்றன.

இரண்டு தரப்புகளுக்கும் இடையிலான இராணுவச் சமநிலை தொடர்ந்து பேணப்படுவது இந்த உடன்பாடு ஸ்திரமாக நிலைத்திருப்பதற்கு அவசியமானதாகும்.

இந்த யுத்தநிறுத்த ஏற்பாட்டுக்கும், அமைதி முயற்சிகளுக்கும் அனுசரணை வழங்கும் நோர்வேத்தரப்புக்கூட இரண்டு பக்கங்களுக்கும் இடையில் இராணுவச் சமநிலை பேணப்படுவது பற்றிய விடயத்தைப் பலதடவைகள் வலியுறுத்தி வெளிப்படுத்தி வந்துள்ளது.

ஆனால், யதார்த்தத்தில் சமச்சீர் நிலைமை நீடிப்பதாக இல்லை.

ஒருபுறம், அமைதிப் பேச்சுகளுக்கான வாய்ப்பைக் குழப்பி, இழுபறி நிலையை நீடிக்கச் செய்து, பேச்சுக்கான சந்தர்ப்பத்தைத் தட்டிக்கழித்து வரும் இலங்கை அரசுத்தரப்பு, மறுபுறத்தில் இராணுவ வலுநிலைமையைத் தனக்கு சாதகமாக்கத் தீவிரமாக்க முயல்கின்றது.

அதைக்கூட, ஒருபுறத்தில் தமிழர் தரப்பின் ஏகப்பிரதிநிதிகளான புலிகள் மீது அபாண்டமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்திக்கொண்டு, மறுபுறத்தில் நைஸாக தனது பலத்தை அதிகரிக்க இலங்கைத் தரப்பு முயல்வதுதான் வேடிக்கை.

"புலிகள் சிறுவர்களைப் படைக்குத் திரட்டுகிறார்கள். புதிதாக இயக்கத்துக்கு ஆள்களைச் சேர்க்கிறார்கள், கடல் வழியாக ஆயுதங்களைக் கடத்தி வருகின்றார்கள்" - என்றெல்லாம் பெருத்த எடுப்பில் பிரசாரத்துக்கான குற்றச்சாட்டுக்களை அடுக்கி வருகிறது இலங்கை அரசு.

புரிந்துணர்வு ஒப்பந்தப்படி புலிகள் ஒழுகினால் அவர்களுக்குப் புதிதாக ஆயுதங்களே வந்துசேர முடியாது. யுத்தம் மீள ஆரம்பிக்கும் வரை அதற்கு வாய்ப்பே இல்லை.

ஆனால், அரசுத்தரப்போ இந்த யுத்தநிறுத்த காலத்தில் ஆயுதங்களை வாங்கிக் குவிக்கின்றது. ஆள்களை முப்படைக்கும் பொலீஸுக்கும் திரட்டுகின்றது. வெளிநாடுகளுக்கு விசேட பயிற்சிகளுக்கு படையினரை அனுப்புகின்றது. போதாக்குறைக்குப் பிரதேச வல்லாதிக்க சக்திகளுடன் இராணுவ ரீதியாகக் கைகோர்த்துத் தனது பலத்தைக் கட்டுமட்டுமன்றி அதிகரிக்க முனைகின்றது.

இவ்வளவற்றையும் செய்துகொண்டுதான், புலிகள் ஒன்றும் செய்யாமல் பார்த்திருக்க - வாளாதிருக்க - வேண்டும் என்று இலங்கை அரசுத் தரப்பு எதிர்பார்க்கிறது.

சரியோ, பிழையோ ஈழவிடுதலைப் போராட்டத்தின் தாக்கம் இந்தியாவில் - குறிப்பாகத் தமிழகத்தில் - பல்வேறு நிலை மாற்றங்களையும் பின்விளைவுகளையும் நிறை குறைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அவை கடந்த கால சரித்திரங்கள். இப்போது முட்டிமோதாமல் - முரண்படாமல் - தள்ளி நிற்கும் ஒரு கௌரவமான நிலை நீடிக்கின்றது. இரு தரப்புக்குமே நல்லதான சூழ்நிலை இது.

இலங்கை அரசு விரிக்கும் வலையில் வீழ்வதன் மூலம் இந்தச் சுமுக நிலைப்பாட்டை இந்தியா குழப்பிவிடக் கூடாது என்பதே ஈழத்தமிழரின் கோரிக்கையும் எதிர்பார்ப்புமாகும்.

இந்தியா, இந்தப் பிரதேச வல்லாதிக்க நாடு அதை ஈழத்தமிழர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால், அதற்காக ஈழத்தமிழரின் இறைமையிலும் உரிமையிலும் இந்தியா கைவைக்கவோ, விளையாடவோ முடியாது. அதற்கு ஈழத்தமிழர்கள் அனுமதிக்கமாட்டார்கள். கடந்த இரண்டு தசாப்த காலத்துக்கு உட்பட்ட வரலாறு அந்தப்போதனையை இந்தியாவுக்கு நன்கு உணர்த்தியிருக்கும்.

அந்த அனுபவப் பாடத்தை இந்தியா மறக்காமல் இருப்பது நல்லது.

இலங்கையின் இன்றைய இராணுவச் சமநிலையைக் குழப்பி, இங்குள்ள அமைதி நிலைக்கு வேட்டு வைப்பது போல எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இந்தியா ஊக்கமளித்துத் துணைபோகுமானால் அது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியதாகும். அதன் விளைவுகளின் தாக்கத்தை அது எதிர்கொள்ளவேண்டியும் இருக்கும் என்பதை அது உணரவேண்டும்.

இந்தியா இறைமையுள்ள நாடு. அருகில் உள்ள இலங்கையும் இறைமையுள்ள நாடு. இறைமையுள்ள ஒரு நாடு இறைமையுள்ள மற்றொரு அயல்நாட்டுடன் இராணுவ ரீதியில் ஒப்பந்தம் செய்வதை யார் கேள்வி எழுப்பமுடியும் என்ற ஒரு நியாயத்தை சிலர் முன்வைக்கலாம்.

ஆனால், ஈழத்தமிழர்களுக்கும் இறைமை உள்ளது. அவர்களிடமும் ஒரு நாட்டுக்குரிய கட்டுமானங்கள் கட்டமைப்புகள் அனைத்தும் உள்ளன என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

எனவே, இலங்கையுடன் கைகோர்க்கும் ஒப்பந்தம் தனக்கு உகந்ததா என்பதை இந்தியா ஒன்றுக்கு இரண்டு தடவை சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

எண்பதுகளின் பிற்பகுதியில் விளைவுகளைப் பற்றிச் சரியாகச் சிந்திக்காமல் நடந்து கொண்டு பல படிப்பினைகளை - அனுபவப்பாடங்களை - பட்டறிவை - பெற்றது போல் இப்போதும் பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக முற்கூட்டியே விடயங்களைச் சீர்தூக்கிப்பார்த்து முடிவுகளை எடுப்பது நல்லது.

# நல்லூர் தேர், தீர்த்த உற்சவ தினங்களில் திருட்டுக்களைத் தடுக்க விசேட நடவடிக்கை

## சிவில் உடையில் பொலீஸார் ரோந்து செல்வர்

யாழ்ப்பாணம், செப்.12

நல்லூர்க் கந்தன் ஆலயத்தின் தேர் மற்றும் தீர்த்தோற்சவ தினங்களில் சன நெருக்கடியான இடங்களில் ஏற்படக் கூடிய அசம்பாவிதங்களைத் தடுப்பதற்கென விசேட பொலீஸ் குழுவினர் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

திருட்டுச் சம்பவங்கள், குழுக்களுக்கிடையிலான மோதல்கள், பெண்கள் மீதான சேஷ்டைகள் என்பவற்றைத் தடுக்கும் வகையிலேயே இந்தப் பொலீஸ் குழுவினர் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான செயல்களில் ஈடுபடுவர்களைப் பொலீஸார் இனங்கண்டு அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கும் விசாரணைகளை நடத்தவும் விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

தவறுகளில் ஈடுபடுபவர்களைப் பொலீஸார் விசேடமாக ஏற்பாடு செய்த பகுதியில் வைத்து விசாரணைகளை நடத்துவர் என்றும் -

பின்னர் மேலதிக விசாரணைகளை யாழ். பொலீஸ் நிலையத்தில் வைத்து மேற்கொள்வர் என்றும் கூறப்பட்டது.

இதேவேளை, மேற்படி உற்சவ தினங்களில் பொலீஸார் சிவில் உடையில் ஆலய வீதியில் நடமாடுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-6)

# தேசிய மட்டத்திற்குத் தெரிவு

யாழ்ப்பாணம்,செப்.12

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவன் சகாயம் துஷ்யந்தன் 11 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் தேசிய மட்டதிற்குத் தெரிவாகியுள்ளார்.

தரம் ஐந்தில் கல்வி கற்கும் இவர், கல்வியுடன் மட்டும் நின்றுவிடாது பாடசாலையின் பிற செயற்பாடுகளிலும் மிகுந்த ஈடுபாடு காட்டிவருகிறார்.

வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட குடும்பத்தைச் சேர்ந்த இம்மாணவன் விளையாட்டுத்துறையில் வளம்குறைந்த பாடசாலையில் கற்று வருகின்ற போதிலும், தனது அதீத திறமையினாலும் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் ஊக்குவிப்பினும் தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளமை போற்றத்தக்கது.

தொடர்ந்தும் இந்த மாணவனுக்கு ஊக்கமும் வசதிகளும் ஏற்படுத்திக் கொடுத்தால் எதிர்காலத்தில் மேலும் தன் திறமையை வெளிப்படுத்தும் சாத்தியம் மிகவும் உண்டு.

விளையாட்டுத்துறையில் எமது மாணவர்கள் - இளைஞர்கள் - சாதனைகள் படைத்து மிளிரவேண்டும் என்பதில் பெருவிரும்பம் கொண்டவர்கள், சகாயம் துஷ்யந்தனின் வளர்ச்சிக்கு உதவவேண்டும். எமது மத்தியில் உயரம்பாய்தலில் ஒரு சாதனையாளனை உருவாக்க மனங்கொள்வோமாக. (10)



பாடசாலை அதிபரிடமிருந்து சான்றிதழ் பெறும் சகாயம் துஷ்யந்தன்.

## பண்டிதர் ஆறுமுகத்தின் கண்கள் தானம்



சுழிபுரம்,செப்.12

பண்ணாகத்தைச் சேர்ந்த பண்டிதர் கலாபூஷணம் அப்பாப்பிள்ளை ஆறுமுகம் தமது கண்களைத் தானம் செய்துள்ளார்.

தமது 87ஆவது வயதில் கடந்த புதன்கிழமை இரவு காலமானார். இறப்பதற்கு முன்னர் இவர் விருப்பம் தெரிவித்தபடி இவரது வீட்டுக்குச் சென்ற யாழ். வைத்தியசாலை வைத்தியர்கள் கண்களை உரியமுறைப் பிரகாரம் எடுத்துச் சென்றனர்.

ஓய்வுபெற்ற ஆசிரியரான இவர், அருட்புலவர், சிவநெறிச் செல்வர் ஆகிய பட்டங்களையும் பெற்றுள்ளார்.

இவரது இறுதிக்கிரியைகள் இன்று காலை பண்ணாகத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் திருவடி நிலை மயானத்தில் தகனஞ்செய்யப்படவிருக்கின்றது.

இவர் கடந்த மாதம் 5 லட்சம் ரூபாவை மக்கள் வங்கியின் மானிப்பாய் கிளையில் வைப்புச்செய்து வலிகாமம் மேற்கில் உள்ள ஒன்பது பாடசாலைகளைச் சேர்ந்த புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மற்றும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகும் மாணவர்களுக்கு உதவுவதற்கென அறக்கட்டளை ஒன்றையும் ஆரம்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர், தமிழ்மொழி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்ட பெரும் தமிழ்ப் பற்றாளர் ஆவார். (4-28)

# தியாகி திலீபனின் 17ஆவது ஆண்டு நினைவாக பாடசாலை மாணவரிடையில் போட்டிகள்

## தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை ஏற்பாடு

யாழ்ப்பாணம்,செப்.12

தியாகி திலீபனின் 17ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் பல்வேறு போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும்.

6ஆம், 7ஆம், 8ஆம் தர மாணவர்கள் கீழ்ப்பிரிவிலும் 10ஆம், 11ஆம் தர மாணவர்கள் மத்திய பிரிவிலும் 12ஆம், 13ஆம் தர மாணவர்கள் மேற்பிரிவிலும் உள்வாங்கப்பட்டுப் போட்டிகளில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

குறிப்பிட்ட பிரிவுகளில் ஒவ்வொரு மாணவரையாவது உள்ளடக்கி ஒரு பாடசாலையில் இருந்து ஐந்து மாணவர்கள் போட்டியில் பங்குபற்றமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கீழ்ப்பிரிவுக் கட்டுரை 150 சொற்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். இந்தப் பிரிவு மாணவர்கள் "திலீபனின் தியாகம்", "திலீபன் காட்டிய வழி", "தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் திலீபன்" ஆகிய தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து கட்டுரை வரைதல்வேண்டும்.

கவிதைப் போட்டியில் பங்குகொள்ளும் மத்திய பிரிவு மாணவர்கள் 50 வரிகளுக்கு மேற்படாமல் "தியாகி திலீபனின் வாழ்வும் போராட்ட வரலாறும்" என்ற விடயப்பரப்பை அடிப்படையாகக் கொண்டு போட்டி நாளில் நடுவர்களால் வழங்கப்படும் தலைப்பில் கவிதை எழுத வேண்டும்.

மேற்பிரிவு மாணவர்கள் பொது அறிவுத் தேர்வில் பங்குகொள்ளமுடியும். ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் தரம் 12, தரம் 13 ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த 10 மாணவர்கள் இதில் பங்குபற்றமுடியும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை உள்ளடக்கியதாகவும் ஏனைய பொது விடயங்களைக் கொண்டதாகவும் அமைந்த வினாக்கள் பொது அறிவுப்போட்டியில் இடம்பெறும்.

மேற்படி போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பங்குபற்றும் மாணவர்களின் முழுப்பெயர், தரம், பங்குபற்றும் பாடசாலை ஆகிய விவரங்கள் உள்ளடக்கப்பட்டு அதிபரின் உறுப்படுத்தலுடன், இரட்டைப் பிரதிகளில் தத்தமது வலயக் கல்வி அலுவலகங்களில் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெறும் மாணவர்களுக்கு வலயமட்டத்தில் சான்றிதழும், பெறுமதி மிக்க பரிசில்களும் வழங்கப்படவுள்ளன என்று தமிழீழக் கல்விக் கழகத்தின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் ஆர்வலன் தெரிவித்தார். (எ-7)

### நாளை

ஆவணி 28
திங்கட்கிழமை
(13.09.2004)
திதி : சதுர்த்தசி
முன்னிரவு 8.34 வரை
நட்சத்திரம் : மகம்
மாலை 5.47 வரை
சுபநேரம்: 12.03 - 1.33
ராகுகாலம்: 7.33 - 9.03
(பழைய நேரப்படி)

# வண்ணை பெருமாள் ஆலயத்தின் பெருந்திருவிழா புதனன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன.

பெருந்திருவிழாக் காலங்களில் 21ஆம் திகதி மாலை சப்பரமும், வெண்ணெய்த்தாழிச் சேவையும், 23ஆம் திகதி தேர்த்திருவிழாவும் இடம்பெறும். தேர்த்திருவிழா அன்று காலை 8.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசையும், 10.30 மணிக்கு வரதராஜப் பெருமாள் தேரில் ஆரோகணித்தலும் இடம்பெறும்.

24ஆம் திகதி முற்பகல் 8 மணிக்கு வசந்தமண்டபப் பூசைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து முற்பகல் 9.30 மணிக்கு புஷ்கரணியில் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். மாலை கொடியிறக்கமும் சந்திரப் பிறைச் சேவையும் நடைபெறும்.

பெருந்திருவிழாக் காலங்களில் காலை சந்திப் பூசை 9 மணிக்கும், ஸ்தம்ப பூசை 9.30 மணிக்கும், வசந்த மண்டபப் பூசை 10.15 மணிக்கும் நடைபெறும். மாலைப் பூசைகள் பிற்பகலில் 3.30 மணிக்கு ஆரம்பமாகி இரண்டாம் காலப் பூசை 3.45 மணிக்கும், ஸ்தம்ப பூசை 4.30 மணிக்கும், வசந்தமண்டபப் பூசை 5.15 மணிக்கும் நடைபெறும்.

கிரியைகள் யாவும் பழைய நேரப்படி நடைபெறும் என ஆதீன மகாசபை அறிவித்துள்ளது. (எ-204)

### உதயவாக்கு

நல்ல எண்ணமும் இனிய நோக்கும் இணைந்தே, இனிய சொற்கள் மலரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக இடமாற்றம் ரத்துச் செய்யப்படும்

தென்மராட்சி,செப்.12

உள்ளூராட்சிச் சபைகளுக்கிடையே அலுவலர்களை உள்ளக இடமாற்றஞ் செய்யவேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித் திணைக்கள இடமாற்றச் சபையினால் 2005ஆம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றங்கள் தற்போது மேற்கொள்ளப்படுவதனால் தங்களினால் உள்ளக இடமாற்றங்கள் எதுவும் நடைமுறைப்படுத்த முடியாது எனவும் இக்காலத்தினுள் ஏதாவது தனிப்பட்ட இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பின் அவற்றை உடனடியாக ரத்துச்செய்யுமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தெ.து. விஜயலட்சுமி சகல பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர்களுக்கும் அறிவித்துள்ளார். உள்ளூராட்சி திணைக்கள இடமாற்ற சபையால் வழங்கப்படாத இடமாற்றங்கள் வலுவற்றதாகுமென உள்ளூராட்சி மன்றச் செயலாளருக்கு அவர் அறிவித்துள்ளார். (8-117)

# மரண அறிவித்தல்கள்

## அருணாசலம் முத்தையா



ஈவினை, புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் முத்தையா 09-09-2004 வியாழக்கிழமை அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் நல்லம்மாவின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும் புஸ்பவதியின் அன்புக் கணவரும் புஸ்பாயினி (சென்றல் நேசிங்கோம்), சவுதாயினி, முருகதாஸ் (ஆஸ்திரேலியா), லவதாஸ் (சுன்னாகம் தபாற்கந்தோர்), நிரோஜினி (உடுவில் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிச்சந்திரனின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12-09-2004) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஈவினை இந்துமயானத்தில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஈவினை,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு.

தகவல்:
மு.ரவிச்சந்திரன்
*(மருமகன்).*

(36309) (26-14)

## குமாரசாமி மனோகரன்



காரைநகர், நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும் 25,டெய்சிவில்லா அவனியூ, பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் தற்பொழுது நோர்வேயில் வசித்துவந்தவருமான குமாரசாமி மனோகரன் 07-09-2004 செவ்வாய்க்கிழமை நோர்வேயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி (கணக்காளர்) - திருநிலைநாயகியின் ஏக புத்திரரும் தங்கராணியின் (நோர்வே) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செபரட்ணம் - அன்னலட்சுமி (அல்வாய்) ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி, புவனேஸ்வரி (டாக்டர் - லண்டன்), யோகேஸ்வரி (ஓய்வு பெற்ற ஆசிரியை - சிங்கப்பூர்), கனகேஸ்வரி (லண்டன்), ஞானேஸ்வரி (கணக்காளர் - லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கந்தையாபிள்ளை (உரிமையாளர், அமுதா நகை மாளிகை), ரவீந்திரா (பொறியியலாளர் - லணடன்), சிவபாதசுந்தரம் (பொறியியலாளர் - சிங்கப்பூர்), கனகலிங்கம் (கணக்காளர் - லணடன்) ஆகியோரின் அருமை மைத்துனரும் அமுதா (கனடா) சுகந்தி (ஆசிரியர் - யாழ்ற்றன் கல்லூரி), ஜெயந்தன் (எழுதுநர், உதவி அரச அதிபர் பணிமனை - காரைநகர்), தர்ஷினி, ரமணன், அமலா, றமிளா (லண்டன்), பிருந்தா (லண்டன்), சுதர்ஷன் (லண்டன்), சுபாஷினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (13-09-2004) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருமனை,
நடுத்தெரு, காரைநகர்.
தொ. பே. இல. 071 2399194.

தகவல்:
கந்தையாபிள்ளை ஜெயந்தன்
*(மருமகன்).*

(36321) (26-14)

## திருமதி
## சிவசுப்பிரமணியம் மனோரஞ்சிதம்



கோயிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் மனோரஞ்சிதம் அவர்கள் நேற்று (11.09.2004) சனிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - பரிமளம் தம்பதியினரின் ஏகபுத்திரியும் திருவேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய ஆசிரியர், சென்.ஜோன்ஸ் கல்லூரி) அவர்களின் அன்புத் துணைவியாரும் கௌரிதேவி, பாலகேதீஸ்வரன், சாவித்திரிதேவி (உப அதிபர், அரியாலை சிறிபார்வதி வித்தியாசாலை), இயற்கையெய்திய சாந்திநிகேதன், தமயந்திதேவி, நளாயினிதேவி, சந்திரமௌலீசன் (ஆசிரியர், யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி), சாயிலக்ஷ்மி (ஆசிரியை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமுள்ள தாயாரும் பத்மநாதன் (U.K.), கௌசலாதேவி (Canada), யோகதாசன், கருணானந்தன், சிவபாலன் (Bharain), தயாநிதி, நேசகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும் அதிசயசொரூபி (U.K.), ஜெயந்தன் (U.K.), நர்த்தனசொரூபன் (U.K.), சிவகாமி (U.S.A.), சிவசாயீசன் (Canada), யோகவிநாயகன், கார்த்திகா, சத்திநாயகி, நிற்சிந்தன், சிவாஜினி, சிவானுஜன், சிவமைந்தன், கௌரிபாலன், தானியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் திருமதி பொன்னம்பலம் - மனோரஞ்சித சிவமணி அவர்களின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12-09-2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.00 மணிக்கு நாயன்மார்கட்டில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"எபநேசா",
செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு.

தகவல்:
கணவர்: சிவசுப்பிரமணியம்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(சி-37618) (26-14-16)

## மாகாண மட்டத் தமிழ்த்தினப் போட்டிகள்

வடக்கு - கிழக்கு மாகாணத் தமிழ் மொழித் தினப்போட்டிகள் திருகோணமலையில் நடைபெறவுள்ளன.

நாட்டுக்கூத்துப் போட்டிகள் எதிர்வரும் 18ஆம் திகதியும் ஏனைய போட்டிகள் 19ஆம் திகதியும் நடைபெற ஏற்பாடகியுள்ளது.

போட்டியாளர்கள் போட்டி நடைபெறும் தினத்திற்கு முன்னைய தினம் பிற்பகல் 2 மணிக்கு திருகோணமலை சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் உள்ள விழாக்குழுச் செயலகத்தில் தம்மைப் பதிவுசெய்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.(4-405)


## இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழி
## ELI யின் இலவசத்தபால் மூல பாடநெறிகள்

ஆங்கிலத்தில் சரளமாக எழுத, பேச, வாசிக்க, 90 நாட்களில் பயிற்சி

- ஆங்கிலத்தை ஆரம்பம் முதல் வீட்டில் இருந்தவாரே இலகுவாக கற்க முடியும்.
- தமிழ் விளக்கத்தில் கூடிய பாடத்தொகுதிகள்.

## இலவசம் Dialog G.S.M தொடர்பை வெல்லலாம்

- இலவச Dialog GSM (தொடர்பு)
- அழகிய கீடெக் மற்றும் 2500 செற்களுக்கு மேல் உள்ளடக்கப்பட்ட 30 days Easy Way English புத்தகம் ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்

(நீங்களும் முந்திக்கொள்ளுங்கள்)

GSM Dialog



மேலதிக விபரங்களுக்கு 4.50 பெறுமதியான 3 முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

TheENGLISHLANGUAGEINSTITUTE

P.O. BOX 083 Kandy
Tel: 0777-220002,
0777-802849


## உலக உளநலநாள் - 2004
## மாணவர் ஊக்குவிப்புப் போட்டிகள்

2004 ஒக்ரோபர் 10 அன்று கொண்டாடப்படவுள்ள உலக உளநல நாளையொட்டி மாணவர்களின் திறன்களை ஊக்குவிக்கும் நோக்குடன் பின்வரும் போட்டிகள் நடத்தப்பட்டு, பங்குபற்றும் மாணவர்கள் அனைவரும் கௌரவிக்கப்படவுள்ளனர்.

1.ஓவியம் 2. கவிதை 3. பேச்சு

இப்போட்டிகள் யாவும் 10வயதிற்குக்கீழ், 15 வயதிற்குக்கீழ், 18 வயதிற்குக்கீழ் என மூன்று பிரிவுகளில் நடத்தப்படவுள்ளன.

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற ஆர்வமுள்ள மாணவர்கள் தங்கள் பெயர், முகவரி, வயது, பிறந்த ஆண்டு, பாடசாலை, வகுப்பு போன்ற விவரங்கள் அடங்கிய தாளினை பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடன் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

அனுப்பவேண்டிய இறுதித்திகதி:
**20.09.2004**

அனுப்பவேண்டிய முகவரி:
**விழா ஏற்பாட்டுக்குழு**
*'சாந்திகம்',*
*இல.15, கச்சேரி நல்லூர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

※ போட்டிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு போட்டி விதிகள் பற்றிய விவரங்கள், போட்டி நடைபெறவுள்ள திகதி, இடம் போன்ற விவரங்கள் அனுப்பி வைக்கப்படும்.

- ஏற்பாட்டாளர்.

(C/37611)(42-14-26)

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலய
முன்னாள் ஓய்வுபெற்ற ஆசிரியர்
பண்டிதர், கலாபூஷணம்
**அப்பாப்பிள்ளை ஆறுமுகம்**

அவர்கள் 08-09-2004 அன்று சிவபதம் அடைந்தமையயிட்டு எமது அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வழக்கம்பரை அம்பாளைப் பிரார்த்திப்பதுடன், துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித் துக்கொள்கின்றோம்.

யா/பண்ணாகம் மெய்கண்டான்
மகாவித்தியாலய கல்விச் சமூகம்.

(36326) (26-14)


மானிப்பாய் நகரில் உங்கள் கையடக்கத் தொலைபேசித் தேவைகளை நிறைவு செய்துகொள்ள

**THE PHONE SHOP MANIPAY**



(Dialog GSM இன் மானிப்பாய் பிரதேசத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

எம்மிடம்
NOKIA, MOTOROLA, SONY ERICSSON, SAMSUNG

அனைத்து வகையான தொலைபேசிகளையும் Kit Card. மொத்தமாகவும் சில்லறையாகவும் Sim Card கையடக்கத் தொலைபேசிக்குரிய பற்றரி, சார்ச்சர், கவர், கேஸ், பெல்ற் ஆகியவற்றையும் Phone Unlogging , Repairing and Service மற்றும்

புதிய பழைய ACD, VCD, Mp3 Songs, CD Writting என்பவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



**THE PHONE SHOP MANIPAY**
(மக்கள் வங்கிக் கட்டடம்)
ஆலடிச் சந்தி, மானிப்பாய்.
T.P.: 077 - 3058399.

NOKIA, MOTOROLA, SONY ERICSSON என்பவற்றை Abans நிறுவனத்தின் 2வருட உத்தரவாதத்துடன் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(36296) (26-14)



**PERSONEL English Classes**

ஆண்டு 6 தொடக்கம்
**A/L (Genral English)**
மாணவர்களுக்கும் A/L எடுத்த மாணவர்களுக்கும் குழுவாகவோ அல்லது தனியாகவோ வீடுகளுக்கு வந்து Spoken With Grammer மிகுந்த பேச்சுப் பயிற்சியுடன் கற்பிக்கப்படும். (36201)

தொடர்புக்கு: 0777 - 618315.



**நிதானம் - நம்பிக்கை**

வீடுகள், காணிகள், கடைகள், தோட்டங்கள் என்பன விற்க விரும்புகின்றீர்களா? வாங்க விரும்புகின்றீர்களா? எதற்கும் என்னுடன் தொடர்புகொள்ளுங்கள்.

தொடர்பு:
**ந.செல்லத்துரை**
இல.11, சப்பல் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 6358.

(36200) (21-14-26)



6th Months

**யாழ்ப்பாணத்தில் M.M.I.C**

20% கழிவு

வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை சார் தபால் மூலம் கற்கை நெறி.

**Diploma in massmedia**

Dip.in.m... Lanka ... சென்ரர்
இல. 15, சிறாம்பியடி ஒழுங்கை,
ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(C/37514) Call: 0777 316258 (42-14-26)


## ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் மழலையாய்
12 - 06 - 1979



விண்ணில் தெய்வமாய்
12 - 09 - 1995

**சிறீஸ்கந்தராஜா றமேஷ்குமார்**

(யாழ்.யூனியன் கல்லூரி ஆண்டு 11 மாணவன்)

பதினாறு வயதுப் பாலகனே உன்னைப்
பாவியவன் பாதையிலே பறித்து விட்டான்
எங்கள் குலத்தின் அன்பின் ஆழ்கடலாய்
எல்லோர் மனதில் தனி இடம் பிடித்துவிட்டு
எங்கள் எல்லோரையும் கண்ணீர மழை பொழிய
வைத்து எங்கு சென்றாய் றமேஷ்?

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

தகவல்:
பெற்றோர், சகோதரர்,
மைத்துனர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

(36318)(39-14-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினி உலகக் கிண்ணக் கிரிக்கெட் -2004

## அமெரிக்காவை வென்றது நியூஸிலாந்து; மற்றைய போட்டி மழையால் தடைப்பட்டது

லண்டன்,செப்.12

மினி உலகக் கிண்ணப் போட்டியில் நேற்றுமுன்தினம் நியூஸிலாந்து - அமெரிக்க அணிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் நியூஸிலாந்து அணி 210 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 347 ஓட்டங்களை எடுத்தது.

அணியின் சகலதுறை ஆட்டக்காரர் நதன்ஆஷ்லே ஆட்டமிழக்காமல் 145 ஓட்டங்களையும் ஸ்கொட் டைரிஸ் 75 ஓட்டங்களையும் கிரேக்மக்மிலன் ஆட்டமிழக்காமல் 64 ஓட்டங்களையும் எடுத்தனர். இதில் 7 சிக்ஸர்களும் 2 பவுண்டரிகளும் அடங்கும். 27 பந்துகளில் 64 ஓட்டங்களைப் பெற்றார் மக்மிலன். அமெரிக்க அணியின் சார்பில் அணித் தலைவர் றிச்சாட் ஸ்ராபிள் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

தொடர்ந்து களமிறங்கிய அமெரிக்க அணி 42.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. அணியின் சார்பில் லம்பேட் 39 ஓட்டங்களையும் அலெக்ஸாண்டர் 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் நியூஸிலாந்து அணியின் சார்பில் ஜேக்கப் ஓராம் 5விக்கெட்டுக்களையும் டானியல வெட்டோரி 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இங்கிலாந்து - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான போட்டி மழையினால் தடைப்பட்டதை அடுத்து, நேற்றுத் தொடர்ந்து நடைபெறவிருந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, மழையால் ஆட்டம் தடைப்படும் வரை 38 ஓவர்களில் 5விக்கெட்டுக்களை இழந்து 198 ஓட்டங்களை எடுத்திருந்தது. விக்ரம் சோலங்கி 62 ஓட்டங்களைப் பெற்றார். போல் கொலிங்வூட் 35 ஓட்டங்களுடனும் ஜோன்ஸ் 23 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருந்தனர். சிம்பாப்வே அணியின் சார்பில் றெயின்போட் 2விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

ஒரு போட்டியில் வெற்றியீட்டியதன் மூலம் நியூஸிலாந்து அணி இரண்டு புள்ளிகளைப் பெற்றுள்ளது. (10)

## இந்திய அணியில் பாலாஜிக்கு பதிலாக அமித் பண்டாரி

லண்டன்,செப்.12


இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் எல்.பாலாஜி மினி உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அவரது அடிவயிற்றுப் பகுதியில் தசைப்பிடிப்பு ஏற்பட்டதையடுத்து, அவர் இத்தொடரில் இருந்து விலகியுள்ளார். கடந்த 7ஆம் திகதி லண்டன் மருத்துவமனையில் இவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டபோதும், உடல்நிலையில் முன்னேற்றம் இல்லாமையால் தொடரிலிருந்து விலகியுள்ளார்.

இவருக்குப் பதிலாக அமித் பண்டாரி அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். ஏற்கனவே, இத்தொடரில் இருந்து சச்சின் டெண்டுல்கர் விலகியுள்ள நிலையில் பாலாஜியும் விலகியுள்ளமை அணிக்குப் பின்னடைவை ஏற்படுத்தக்கூடும்.

இதேவேளை -

தமது அணி, மினி உலகக் கிண்ணத்தை இம்முறை கைப்பற்றும் என்று இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர் அனில் கும்ளே நம்பிக்கை தெரிவித்துள்ளார். (10)



இங்கிலாந்து அணி வீரரைப் பிடியெடுக்க முற்படும் சிம்பாப்வே அணி வீரர் டக்ளஸ் ஹொண்டோ

### மீள்பார்வை

வைஷாலி

2000 ஆம் ஆண்டு நைரோபியில் நடந்த இரண்டாவது மினி உலகக் கிண்ணப் போட்டியில் உலகச் சம்பியனான ஆஸ்திரேலிய அணியை, இந்திய அணி கால் இறுதிப் போட்டியில் 20ஓட்டங்களால் வெற்றியீட்டியிருந்தது. இப்போட்டியில் டெண்டுல்கர் பெற்ற ஓட்டங்கள் 38.

அப்பொழுது 18வயதுப் பையனாக இருந்த யுவராஜ் சிங் 80பந்துகளில் 84ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இந்திய அணி இதனால் 265ஓட்டங்களைப் பெற்றது. இந்த இலக்கை அடையமுடியாமல் ஆஸ்திரேலிய அணி 20ஓட்டங்களால் தோல்வியுற்றது. பின்னர், அரையிறுதிப் போட்டியில் தென்னாபிரிக்க அணியை 95 ஓட்டங்களால் வெற்றியீட்டியிருந்தது இந்திய அணி.

இப்போட்டியில் கங்குலி ஆட்டமிழக்காமல் 141ஓட்டங்களையும் ட்ராவிட் 58 ஓட்டங்களையும் டெண்டுல்கர் 39ஓட்டங்களையும் எடுத்தனர்.

இறுதிப் போட்டியில் இந்திய அணி நியூஸிலாந்து அணியைச் சந்தித்தது. இப்போட்டியிலும் 117 ஓட்டங்களைப் பெற்றார் கங்குலி. டெண்டுல்கர் 69ஓட்டங்களையும் ட்ராவிட் 22 ஓட்டங்களையும் பெற்றனர். 6விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 264 ஓட்டங்களைப் பெற்றது இந்திய அணி.

இதற்குப் பதிலளித்து ஆடிய நியூஸிலாந்து அணி 49.4 ஓவர்களில் அதாவது 2பந்துகள் மீதமிருக்கையில் 6விக்கெட்டுக்களை இழந்து வெற்றியீட்டிக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. சகலதுறை வீரர் கிறிஸகெய்ன்ஸ் ஆட்டமிழக்காமல் 102 ஓட்டங்களையும் கிறிஸ் ஹரிஸ் 46 ஓட்டங்களையும் ஜெப் ஆஷ்லி 37 ஓட்டங்களையும் ரோஜா டவோஸ் 31 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.



இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய சிம்பாப்வே அணியின் றெயின்போட்.




இங்கிலாந்து அணி வீரர் விக்ரம் சோலங்கியை ஆட்டமிழக்கச் செய்த சிபந்தா.




அறிமுகமான அமெரிக்க அணியின் வீரர்கள் மகிழ்ச்சியுடன்.

### இன்றைய போட்டி

**தென்னாபிரிக்கா எதிர் பங்களாதேஷ்**



27 பந்துகளில் 64 ஓட்டங்களைப் பெற்ற மக்மிலன்



145 ஓட்டங்களைப் பெற்ற நியூஸிலாந்து அணி வீரர் நதன் ஆஷ்லே.

## கென்ய அணியை குறைத்து மதிப்பிட முனையக்கூடாது

கென்யாவிற்கு எதிராக இந்தியா இதுவரை 12 ஆட்டங்களில் ஆடியுள்ளது. 10 ஆட்டங்களை இந்தியா வென்றுள்ளது. 2 ஆட்டங்களை இந்தியா கென்யாவிடம் தோற்றும் உள்ளது. ஆகவே, இந்தியா கென்யாவை அலட்சியமாக எண்ணக்கூடாது. 2001இல் தென்ஆபிரிக்காவில் ஒரு முத்தரப்புப்போட்டி நடந்தது. அதில் தென்ஆபிரிக்கா, இந்தியா, கென்யா ஆகிய நாடுகள் பங்கேற்றன.

இந்தியா அப்போட்டியில் கென்யாவுடன் 3 ஆட்டங்களில் ஆடியது. முதல் ஆட்டத்தில் கென்யாவை 37.1 ஓவர்களில் 90 ஓட்டங்களுக்குள் சுருட்டியது. அகார்கர் 4விக்கெட்டுக்களையும் கும்ளே 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இந்தியா 11.3 ஓவர்களில் வெற்றி இலங்கை எட்டியது.

ஆனால், அடுத்து நடந்த ஆட்டத்தில் கென்யா 70 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவைத் தோற்கடித்தது. கே.ஓ.ஒடியேனோ (64), ஆர்.டி.ஷா (50), டி.எம்.ஒடோயோ (51) ஆகியோர் சிறப்பாக ஆடி 6 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு கென்யா 246 ஓட்டங்களை எடுக்க உதவினர். இந்தியா 46.4 ஓவர்களில் 176 ஓட்டங்களுக்கு சுருண்டது.

ஆனால், கென்யாவிற்று எதிராக ஆடிய 3ஆவது ஆட்டத்தை இந்தியா எளிதில் வென்றது. 3 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு இந்தியா 351 ஓட்டங்கள் குவித்தது. கங்குலி (111), டெண்டுல்கர் (146), ஷேவாக் (55) ஓட்டங்களை எடுத்தனர். கென்யா 165 ஓட்டங்கள் எடுத்து 186 ஓட்டங்களால் தோற்றது. ஆனால் இறுதியாட்டத்தில் இந்தியா தென்ஆபிரிக்காவிடம் தோற்றது.

கென்யா இந்திய மண்ணிலும் இந்தியாவை வீழ்த்தியுள்ளது. குவாலியரில் 1998இல் நடந்த ஒரு முத்தரப்புப் போட்டியில் கென்யா 69 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியாவைத் தோற்கடித்தது. 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 265 ஓட்டங்கள் குவித்தது கென்யா. இந்தியாவை 47.1 ஓவர்களில் 196 ஓட்டங்களுக்குள் சுருட்டியது.

இந்தியாவை ஒருமுறை தோற்கடித்த அணியாக கென்யா இருந்தாலும், இங்கிலாந்தில் 1999இல் நடந்த உலகக்கிண்ணப் போட்டியில் இந்தியாவிடம் படுதோல்வி அடைந்தஅணியே அது. பிரிஸ்டலில் நடந்த ஆட்டத்தில் இந்தியா 2 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 329 ஓட்டங்களைக் குவித்தது. டெண்டுல்கர் (127), ட்ராவிட் (104) கென்யா 7 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 235 ஓட்டங்களையே எடுத்தது. இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொஹந்தி சிறப்பாகப் பந்துவீசி 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

சென்ற உலகக்கிண்ணப் போட்டியில் முன்னாள் இந்திய வீர் சந்தீப் பட்டீலை பயிற்சியாளராகக் கொண்டிருந்த கென்யா அரையிறுதிக் கட்டத்தை எட்டியது. ஆனால் அப்போட்டியில் இந்தியாவிடம் 'சூப்பர் 6' ஆட்டத்திலும் அரையிறுதி ஆட்டத்திலும் அது தோல்விகண்டது.

'சூப்பர் 6' ஆட்டத்தில் கங்குலி (107), யுவராஜ்சிங் (58), ட்ராவிட் (32) என 4 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கான 226 ஓட்டங்களை எட்ட உதவினர். அரையிறுதி ஆட்டத்திலும் கென்யாவிற்கு எதிராக ஆட்டம் இழக்காமல் சதம் (111) அடித்து வெற்றிக்கு உதவினார் கங்குலி. ஷேவாக் (33), டெண்டுல்கர் (83) சிறப்பாக ஆடினர். இந்தியா கென்யாவை 46.2 ஓவர்களில் 179 ஓட்டங்களுக்குள் சுருள வைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆழியவளையில் 25 வீடுகள் நிர்மாணம்

செம்பியன்பற்று,செப்.12

வடமராட்சி கிழக்கு ஆழியவளைப் பிரதேசத்தில் உலகவங்கியின் நிதியுதவியுடன் 25வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இவ்வீடுகளை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன் பூர்த்திசெய்யுமாறு பயனாளிகளிடம் மருதங்கேணி உதவி அரச அதிபர் கேட்டுள்ளார். (எ-36)


**மனோதத்துவ வைத்தியம்**
**(GENERAL PSYCHO THERAPY)**

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் 14.09.2004-18 - 09-2004வரை
முன்கூட்டியே பதிவு செய்யவும்.

இளைஞர்களே!

☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம்
☆ ஆளுமைக்குறைவு ☆ நடுக்கம் ☆ நித்திரைக் குறைவு

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள் ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீங்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச்சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்று பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதிநேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம் S.M.P.
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)
(சி-30109) (24-19-15)


## அடகு நகைகள் ஏல விற்பனை

யாழ்ப்பாணம்,செப்.12

குடாநாட்டிலுள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் கடந்த வருடம் ஜூன் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத தங்க நகைகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

யாழ்.ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கிக் கிளையில் அடுத்த மாதம் 2ஆம் திகதி தொடக்கம் நகைகள் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

யாழ்.பிரதான வீதிக் கிளை நெல்லியடிக் கிளை, யாழ்ஸ்ரான்லி வீதிக் கிளை, சங்கானைக் கிளை, சாவகச்சேரிக் கிளை, வல்வெட்டித்துறைக கிளை, சுன்னாகம் கிளை, பருத்தித்துறைக் கிளை, யாழ்.பல்கலைக்கழகக் கிளை, யாழ்.கன்னாதிடடிக் கிளை ஆகியவற்றில் அடகு வைத்த நகைகளே இவ்வாறு ஏலத்தில் விடப்படவுள்ளன (எ-204)

☆ ☆ ☆

இலங்கை வங்கியின் யாழ்ப்பாணம் மேற்றரக்கிளை, ஸ்ரான்லி வீதி, யாழ்.இரண் டாம் கிளை, பருத்தித்துறை, மானிப்பாய், சுன்னா கம் ஆகிய கிளைகளில் கடந்தவருடம் ஜூலை மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

மீட்கப்படாத இந்த அடகு நகைகள் எதிர்வரும் 25ஆம், 26ஆம் திகதிகளில் காலை 9மணி தொடக்கம் யாழ்ப்பாணம் மேற்றரக் கிளையில் ஏலத்தில் விடப்படும். இதுவரை மீட்கப்படாத அடகு நகைகளை எதிர்வரும் 24ஆம திகதி வெள்ளிக்கிழமைக்கு முன் மீட்கலாம் என வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (எ-204)

### கட்டைவேலி தேவாலய ஆண்டு விழா

கட்டைவேலி மெதடிஸ்த தேவாலயத்தின் 183ஆம் ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும். இவ்விழாவையொட்டி பருத்தித்துறை - கட்டைவேலி சேகர முதன்மைக்குரு அருட்திரு. எஸ் அழகராசா தலைமையில் நன்றி செலுத்தும் வழிபாடு இடம்பெறும். தொடர்ந்து பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறும். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மெதடிஸ்த குருவானவர்கள், அருட்பணியாளர்கள் ஆகியோர் நிகழ்வுகளில் கலந்து கொள்வார்கள். (எ-173)

### நெற்செய்கைக்குத் தயாராகும் விவசாயிகள்

வலிகாமம் மேற்குப பகுதியிலுள்ள வயல் நிலங்களில் காலபோக நெற் செய் கையை ஆரம்பிப்பதற்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

வட்டுக்கோட்டை, அராலி, சங்கரத்தை, சுழிபுரம், சங்கானை ஆகிய பகுதி வயல்களிலே காலபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்கு ஏதுவாக வயல் நிலங்களுக்குக் குப்பைகள கொட்டப்பட்டு நிலம் பண் படுத் தப் பட்டு வருகின்றது. (எ-1[illegible])

### பளை செயலகத்தில் நடமாடும் சேவை

கிளிநொச்சி மாவட்ட பிறப்பு, இறப்பு பதிவுகாரர் பணிமனையின் நடமாடும் செயலகச் சேவை எதிர்வரும் 19ஆம் திகதி பளைப பிரதேச செயலகத்தில நடைபெறவுள்ளது.

காலம் கடந்த பிறப்பு மற்றும் இறப்புச சான்றிதழ் போன்றவை நடமாடும் செயலக சேவையில் மேற் கொள்ளப்படவுள்ளன.

மாவட்ட பதிவாளர் திருமதி கே.செல்வராஜா தலைமையிலான உத்தியோகத்தர்கள் நடமாடும் செயலக சேவையில் கலந்துகொள்வர். (எ-117)


**BODY TONE PROTEIN COMPLEX TABLETS**





* கடின உழைப்பாளிகளுக்கு
* சோர்வு தன்மை அகற்ற
* மிதமிஞ்சிய சக்தி தரவல்ல
* உடல் இயக்கத்தை துரிதப்படுத்த
* ஆரோக்கியத்தை மேன்மைப்படுத்த

இயற்கை மூலிகைகளாலான 19 அமினோ அமிலங்களில் 10 அத்தியவசியமான அமிலங்களை உள்ளடக்கியது

போலிகளை கண்டு ஏமாறாமல் ORIGINAL BODYTONE வில்லைகளை பெற்று கொள்ளவும்.

பக்கவிளைவுகள் அற்றது
உறுதிக்கு உத்தரவாதம்

Importers & Distributors
K.S.P. International Pharmacy No. L4, First floor, Central Bus Stand Building, Colombo - 11. Tel : 2449766

அத்துடன் நோயிலிருந்து தேறி வருபவர்களுக்கும், பலவீனமானவர்களுக்கும் உடல் உபாதைகளிலிருந்தும் நிவாரணம தரக்கூடியது

Ceycom



**யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன்**
**ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு**

விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள், அரச, தனியார் அலுவலர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், வீட்டுப்பெண்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள்

**முற்றிலும் புதிய முறையில் முழுமையாகக் கதைப்பதற்கான வகுப்புகள்**

காலம்: 2 மாதங்கள்

கட்டணம்: ஆங்கிலம் 6000, சிங்களம் 4000

50% கட்டணம்

**12, 13ஆம் திகதிகளில் சலுகைக் கட்டணத்துடன்**

ஆங்கில நேரடி வகுப்பு ரூபா 3000/=
சிங்கள நேரடி வகுப்பு ரூபா 2000/=

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு, மானிப்பாய், சாவகச்சேரி, ஆவரங்கால், பருத்தித்துறை உட்பட யாழ்ப்பாணத்தில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் வகுப்புகள் இடம்பெறும்.

**நாடு தழுவிய பொதுப் பரீட்சை October 30, 2004**

**மேலதிக விவரங்கள்:**

யாழ்.கொழும்பு தலைமையகத்தில் அல்லது வகுப்புகள் நடைபெறும் இடங்களில்! (சி-37583)(26-34-16-17)

**SAAMSTECH**
Psalm Institute of Engineering and Technology
Colombo Head Office: 22 -1/4, Galle Road, Dehiwala. 0115540200
Jaffna Head Office: 841, Hospital Road, Jaffna. T.P.No. 077 3068968.



நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் நடமாட
**அருந்துங்கள்...!**

**அண்ணா கோப்பி**

**நல்லூர் ஆலய - சிவன் கோயிலுக்கு**
அருகிலுள்ள "அண்ணா"
வியாபார நிலையத்தில்
அண்ணா உற்பத்திப் பொருள்களான
❊ தோசை மா ❊ அப்பம் மா ❊ ஜீவாகாரம் ❊ அரிசிமா
❊ சரக்குத் தூள் ❊ சொட்டுநீலம்
அடங்கிய பொதியை 100/= ரூபா கொடுத்து வாங்கி நாம் வழங்குகின்ற இனாம் பொருள்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
(சி-37580)(34-21-116-17)



**இசைக் கருவிகள்**



சகலவிதமான இசைக்கருவிகளையும், அவற்றின் உதிரிப்பாகங்களையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். அவற்றை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

**சாயி சங்கீதா**
UG53, பீபள்ஸ் பார்க், கேஸ்வேர்க் வீதி, கொழும்பு - 11. தொலைபேசி: 2384222, 2445102
பக்ஸ்: 2445102 ஈ-மெயில்: saimusic@sltnet.lk

Talent Media - 2673475



வரனைத் தேடி செருப்புத் தேய்ந்து விட்டதா?
கைகளினால் குறிப்பைத் தேடிப் பார்த்து
கண்களும் கலங்கி விட்டதா!

**இன்றே நாடுங்கள்**

எங்கள் கணனிப் பணிமனைக்கு
இலகுவில் உங்கள் துணையைத் தேட

**மாலையோகம்**

இல. 10, பம்பலப்பிட்டி தொடர் மாடி சனசமூக நிலையம்
கொழும்பு - 04, இலங்கை.

தொலைபேசி இல.: 0094-11-2595983
E-Mail: malayogamlanka@yahoo.com

அலுவலக நேரம்: காலை 10.00 - 12.00 மணி பதிவுசெய்தல்.
மாலை 5.00 - 7.00 மணி தெரிவு செய்தல்.
(முன் ஏற்பாட்டின் படி By Appointment)


## மரண அறிவித்தல்

### பண்டிதர் அப்பாப்பிள்ளை ஆறுமுகம்

(அருட்புலவர், சிவநெறிச்செல்வர், ஓய்வுபெற்ற ஆசிரியர்)



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட பண்டிதர் அ.ஆறுமுகம் அவர்கள் 08-09-2004 புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அற்புதமலரின் அன்புத் துணைவரும் அமரர்கள் அப்பாப்பிள்ளை, செல்லம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும் அமரர் திருமதி நா.இராசம்மா மற்றும் திருமதி சு.பொன்னம்மா, இராமசாமி (சங்கானை, கடை), திருமதி பா.மனோன்மணி, பொன்னம்பலம் ஆகியோரின் சகோதரரும் விவேகானந்தன் (நோர்வே), சிவானந்தன் (Jaffna house - லண்டன்), முருகானந்தன் (நோர்வே), திருமதி து.வசந்தமலர், திருமதி க.மங்கையர்க்கரசி (நோர்வே), திருமதி செ.திலகவதியார் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் வி.பாலராணி (நோர்வே), சி.மகாராணி (லண்டன்), மு.குணலட்சுமி (நோர்வே), த.துரைலிங்கம் (கட்டடத் திணைக்களம், முல்லைத்தீவு), க.கணபதிப்பிள்ளை (நோர்வே), பொ.செந்தில்நடராஜா (கல்வித் திணைக்களம் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனாரும் க.எதிர்மன்னசிங்கம் (மலேசியா), சி.இராஜேஸ்வரி (ஆஸ்திரேலியா), க.கிருஸ்ணமூர்த்தி, ப.இராசமலர் (கொழும்பு), இ.பொன்னம்மா, பொ.திரவியம் ஆகியோரின் மைத்துனரும் சுதர்சன் (பொறியியலாளர்), சடாச்சரம் - சுகன்யா (லண்டன்), இராகுலன் (நோர்வே), சோபிகா, கிருஷான் (லண்டன்), அருள்லிங்கம், தாரணி, தயாலிங்கம், சுகந்தலிங்கம், நோர்வேயில் வசிக்கும் ரோசிகா, சயந்தன், கபிலன், ஆதீபன், பார்த்தீபன், ஜெயதீபன், அற்புதன் மற்றும் ஜெனனி, கம்சவாகினி, தர்சிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12-09-2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அ.இராமசாமி
*(சகோதரன்)*

பண்ணாகம்,
சுழிபுரம்.

(36315) (26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்நிதி ஆலய உற்சவ விசேட சேவை:

# பருத்தித்துறை டிப்போவுக்கு ரூ.5 லட்சம் மேலதிக வருமானம்

வடமராட்சி,செப்.12

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோவில் வருடாந்தப் பெருந்திருவிழாவின்போது விசேட பஸ் சேவைகளை நடத்திய வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ 5 லட்சம் ரூபாவை மேலதிக வருமானமாகப் பெற்றுள்ளது.

பருத்தித்துறை டிப்போவின் பஸ் சேவைகள் மூலம் தினமும் சராசரியாக இரண்டு லட்சம் ரூபாவை வருமானமாகப் பெற்றுவருவது வழக்கமாகும்.

ஆனால், வழமையான வருமானத்தைவிட பெருந்திருவிழாக்காலத்தில் மேலதிகமாக 5 லட்சம் ரூபாவை வருமானமாகப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்திருவிழாவின்போது பருத்தித்துறை டிப்போ விசேட பஸ் சேவைகளை நடத்துவதற்கு வசதியாக யாழ்ப்பாணம் டிப்போ 5 பஸ் வண்டிகளை மேலதிகமாக வழங்கியிருந்தது.

இதுதவிர, யாழ்ப்பாணம் டிப்போவும் சந்நிதி கோயில் பெருந்திருவிழாவை முன்னிட்டு சில விசேட சேவைகளை மேற்கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (எ-173)

# கரணவாய் தெற்கு தலையாட்டிவீதி 20 வருடங்களாகப் புனரமைக்கப்படவில்லை

வடமராட்சி,செப்.12

மக்கள் குடியிருப்புக்கள் நிறைந்த கரணவாய் தெற்கில் உள்ள தலையாட்டி - முள்ளி வீதி கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாகப் புனரமைக்கப்படவில்லை.

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் விழுந்த ஆலடியில் இருந்து ஆரம்பமாகும் இவ்வீதி உப்பு றோட் வல்லை - யார்க்கரு வீதியில் முடிவடைகிறது.

இரண்டுமைல் நீளமான இவ்வீதி, பல கிராமங்களை ஊடறுத்துச் செல்கின்றது. இக்கிராமங்களைச் சேர்ந்த பலதரப்பட்ட பொதுமக்களும் தமது அன்றாட, அத்தியாவசிய தேவைகள், அலுவல்களுக்கு இவ்வீதி ஊடாகவே நெல்லியடி, உடுப்பிட்டி போன்ற இடங்களுக்கும் -

யாழ்ப்பாணம் போன்ற தூர இடங்களுக்குச் செல்வதற்கான பஸ் சேவையைப் பெறுவதற்காகத் தலையாட்டிக்கு (விழுந்த ஆலடிக்கு) வந்து செல்லவேண்டியுள்ளது.

இவ்வீதி திருத்தப்படாமையினால் பாதசாரிகள், சைக்கிளில் செல்வோர், இதர வாகனங்களில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளார்கள். (எ-173)

# உசன் ஆலயச்சூழலில் மீள்குடியமர்வு குறித்து ஆராய விசேட கலந்துரையாடல்

## படைத்தரப்பு ஏற்பாடு செய்கிறது

தென்மராட்சி,செப்.12

உசன் கந்தசுவாமி கோவில் சுற்றாடலில் மக்களை மீளக குடியமர்த்துவது தொடர்பாக படைமுகாம்களாகப் பயன்படுத்தப்பட்டுவரும் வீடுகளின் உரிமையாளர்கள் அப்பகுதிக் கிராம அலுவலர், பிரதேச செயலர் ஆகியோர்களுடன் கலந்துரையாடல் நடத்தவுள்ளதாக 55ஆவது படையணியின் தலைமைக்காரியாலய அதிகாரி அறிவித்துள்ளார்.

கலந்துரையாடல் நடத்துவதற்கான இடம், திகதி ஆகியவற்றை ஒழுங்குசெய்து அறிவிக்குமாறு பிரதேச செயலரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வீடுகளின் உரிமையாளர்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள், பிரச்சினைகள் ஆகியவற்றைப் படைத்தரப்பு அறிந்துள்ளது என்றும் -

இவ்வீடுகளில் உள்ள முகாமை அகற்றுவதற்கு உயர் அதிகாரிகளின் அனுமதி பெறப்படல்வேண்டும் என்றும் -

இதற்காகப் படையின் உயர் அதிகாரிகளுக்கு அனுமதி கோரி கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்றும் - படையினர் பிரதேச செயலருக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதில் கிடைக்கும்வரை பொறுமையாக இருக்குமாறு வீடுகளின் உரிமையாளர்களைக் கேட்டுக் கொள்ளுமாறும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)


இன்று நல்லைக் கந்தன் ஆலயத்தில்
23 ஆம் திருவிழா
பகல் திருவிழா காலை 10.30 மணிக்கு
இரவுத் திருவிழா மாலை 6.30 மணிக்கு
அழகிய பெரிய சப்பரம் திருவீதியுலா
சப்பரத்திலே வருகின்ற சுப்ரமணியா! வேலா!!
முப்புரமெரித்த சிவனார் மகனே! வா! வடிவேலா!!





கொழும்பு பங்குப் பரிவர்த்தனை
பங்குச் சந்தையில் முதலிட வேண்டுமா?
தொடர்புகொள்ளுங்கள் : "பொஸ்கோ"
இல.252 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக)





06.09.2004 முதல் 15.09.2004வரை
காலை 9 மணியிலிருந்து இரவு 9 மணி வரை மட்டும்
ஆஷா ஃபிலிப் செக்யூரிட்டீஸ் : கேதீஸ்வரன், சுதர்ஷின், விஜயந்தன்.(222- 2592)
பாட்லீட் மலோரி ஸ்டொக் புறோக்கேர்ஸ் : நிரஞ்சன்(222-7012, 0777-222291)
கப்பிட்டல் எலயன்ஸ் ஹோல்டிங்ஸ் : முகுந்தன்(0777-770014)
எச் என் பி ஸ்டொக்புறோக்கேர்ஸ் : சுமங்களா, வசந்தகுமார்(222-2787,222-3463)
லங்கா செக்யூரிட்டீஸ் : மயூரன்(0777-392231), நிரஞ்சன் றைல்ஸ்(0712-731254)
(C/37486)


## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

யாழ்ப்பாணம்,செப்.12

நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றத்தினர் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் சப்பரத் திருவிழாவான இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிககு வி.சிவஞானசேகரத்தின் பாட்டுக் கச்சேரி இடம் பெறும்.

இதில் பக்கவாத்தியதாரர்களாக வயலின் - சைந்தவி இராதாகிருஷ்ணன், மிருதங்கம் - எஸ். துரைராசா, கெஞ்சிரா - கே.அனந்தகோபன், முகர்சிங் - எம்.கஜன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (எ-204)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,செப்.12

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்தப் பெருந திருவிழாவையொட்டி இந்துகலாசார திணைக்களத்தின் யாழ். மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்திவரும் ஆன்மீக நிகழ்வில் சப்பரத்திருவிழாவான இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணிக்கு யாழ். உரும்பிராய் சந்திரோதயா வித்தியாசாலை அதிபர் கவிமணி க.ஆனந்தராசாவின் 'கந்தன் கனியமுதம்' நிகழ்வு இடம்பெறும். (எ-204)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,செப்.12

நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் மேற்கு வீதியிலுள்ள ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய மண்டப அரங்கில் தினமும் 6 மணிக்கு நடைபெற்று வரும் கம்பராமாயணத் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் சப்பரத்திருவிழாவான இன்று ஞாயிற்றுக்கிழமை கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ சிவ. வை.நித்தியானந்தசர்மா "இன்றுபோய் நாளை வா" என்னும் தலைப்பில் இசைப் பேருரை நிகழ்த்துவார். (எ-204)

✦ ✦ ✦

யாழ்ப்பாணம்,செப்.12

நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவை முன்னிட்டு அமெரிக்கத் துறவி சுவாமி தந்திரதேவா நிகழ்த்தும் 'இந்துமதம் என்ற சொல்லின் அர்த்தம் என்ன' என்ற தலைப்பிலான தொடர் சொற்பொழிவு இன்று மாலை 4 மணிமுதல் 5 மணிவரை நல்லூர் சிவன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ)

## முத்தனென வாழ முயல்

நேரிசை வெண்பா

உருக்கு மொழியால் உளங்கொள்ளை கொண்டு
கருக்குழியிற் சேராமற் காத்தான் - திருக்குழாம்
காலையும் மாலையுங் கைதொழுது போற்றுநல்ல
வேலோன் பதியில் விரைவிந்து.

விரைமலரைத் தூவியே மெய்விதிர்த்துத் தொண்டர்
நிரையாய் நினைப்பறவே நின்று - கரையில்லா
ஆனந்தங் கொண்டே அவனேநான் என்றுநிதம்
ஞானத்தாற் சொன்னார் நயந்து.

நயப்பார் மிகவியப்பார் நாமறியோம் என்றே
பயப்பா டுடன்பாதம் வீழ்ந்து - சுயபுத்தி
அற்றவராய்ச் சோர்வுமிக அப்பனே யென்றழுவார்
மற்றொன் றறியார் மனத்து.

மனத்துயரம் மாற்ற மருந்துண்டோ விங்கு
முனைத்துருவஞ் சூரர் முடியத் - தனித்தவேல்
உண்டே துணையென்றோர்ந் தும்பர்சிறை மீட்டவனைக்
கண்டே களிக்கக் கருது.




கருத்தி லிருக்குங் கதிர்காமத் தோனை
வருத்தமுற் றேன்தேடு கின்றாய் - திருத்தியுன்
சித்தமிசை நித்தம் திகழொளியைக் கண்டுநீ
முத்தனென வாழ முயல்.

- யோகர்சுவாமிகள்.

# நல்லூர்க்கந்தன்

## பெருந்திருவிழாக் காலச் சிறப்பிதழ்

(23ஆம் திருவிழா)



## அப்பனவன் சப்பரம்!

வஞ்சமனம் கொஞ்சுமெழில் கண்டுதளர்ந் தாடும்
வந்தபகை துண்டுவிழ வெட்கமெழ ஓடும்
கொஞ்சுதிருப் பாலகனைக் கண்டுவிழி கூசும்
கூடுமருள் நீறைநுதல் மீது விரல் பூசும்
மஞ்ஞையதில் வேலெழுந்து மன்றில்புகழ் சேர்க்கும்
மந்திரமும் நாதமென மகிழந்துமணி ஆர்க்கும்
சஞ்சலத்தின் சிரசறுக்கும் சந்நிதியாம் நல்லை
சப்பரத்தில் அப்பனெழச் சாயுமினித் தொல்லை!

- அனலையூர் சேந்தன்.

## அருள்தாராய் நல்லை வேலா!

யுத்தமொன்று வந்தபோது நல்லைவேலா - நாங்கள்
உயிருக்காக ஓடிவந்தோம் நல்லை வேலா
வைத்தபொருள் வைத்தபடி நல்லை வேலா - நாங்கள்
வைத்துவிட்டே ஓடிவந்தோம் நல்லை வேலா

வீடுவாசல் விட்டுவந்தோம் நல்லை வேலா - இப்போ
வீதியில் நிற்கிறோமே நல்லை வேலா
பாடுபட்டுத் தேடிவைத்தோம் நல்லை வேலா - எல்லாம்
பாதியிலே போச்சுதப்பா நல்லைவேலா

பரம்பரை எங்கள் மண்ணை நல்லை வேலா - உயர்
பாதுகாப்பு வலயமாம் நல்லை வேலா
வரந்தர வேண்டுமையா நல்லை வேலா - எங்கள்
மண்ணில் மீண்டும் குடிபுக நல்லைவேலா

வேருடனே சாய்ந்துவிட்டோம் நல்லை வேலா - இனி
வேறுவழி கண்டறியோம் நல்லை வேலா
ஆருடனே நோவதப்பா நல்லை வேலா - எம்மை
ஆதரித்துன் அருள்தாராய் நல்லை வேலா

- வ.சின்னப்பா தனங்களப்பு.

## அனுதினம் பாடிட வா!

இராகம்: வலஜி தாளம்: ஆதி

பல்லவி

கூவி கூவி குயில் பாடும் சோலையிலே
நல்லூர் சோலையிலே – பாடி கீதம்
பாடி நானும் துதிப்பேன் முருகனையே
நல்லூர் முருகனையே முருகா குமரா என்று (கூவி கூவி..)

அனுபல்லவி

குருவடி வேலவன் குறவள்ளி கந்தனவன்
குன்றாறு குடி கொண்ட கூர்வேல் முருகனவன்
ஆண்டியும் அவனாகி அவனாறு முகமாகி
மாதிருவர் வரனாகி வண்ணமயில் மீது வர (கூவி கூவி...)

சரணம்

முத்தைத்தரு பத்தித் திருநகையென
முதலடி கொடுத்த பெருமானே
உனை நினைத்து இசை புகழ்ந்து பாடிட
குருவாய் வருவாய் சரவணனே
அருணகிரி நொந்த வேளையிலே வந்து
ஆண்டருள் கொண்ட வேலவனே
அடியவன் நான் உந்தன் அன்பினை வேண்டி
அனுதினம் பாடிட நீ வருவாய் என்று (கூவி கூவி...)

- ஏழாலையூர் த.சற்குருநாதன்.

## தம்மொழி பேணவைப்பாய்!

நல்லூர்க் கந்தா நலமருள்வாய்
நல்ல தமிழினை வளர்த்திடுவாய்!

எல்லா மக்களும் தமிழ்மொழியை
என்றும் வளர்த்திட அருள்தருவாய்!

தமிழில் வாழ்த்த வரவேற்க
தமிழ் மக்கள் விரும்பிடச் செய்திடுவாய்!
தமிழே உருவாம் உன்தனக்கு
தமிழில் மந்திரம் சொல்லவைப்பாய்!

தமிழர் தங்கள் இனங்காட்டும்
தமிழ் உடை பேணிட வைத்திடுவாய்!
தமிழில் இசையை இசைக்க வைப்பாய்!
தமிழில் நடனம் கற்கவைப்பாய்!

தம் உடை தம்மொழி பேணவைப்பாய்!
தாழ்வு மனப்பான்மை நீக்கிவைப்பாய்!
எம்மொழி யேனும் கற்றிடினும்
எம்மொழி தமிழ்மொழி பேணவைப்பாய்!

- மீசாலையூர் சிவரூபி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**PRINCE**

## துருப் பிடிக்காத உலோக கிச்சன் சின்க்

## பிரின்ஸ் நீடித்த உழைப்பிற்கு கூடிய நிக்கல்

பூசப்பட்டுள்ளதால் சந்தையிலுள்ள ஏனைய கிச்சன் சின்குகளைவிட விசேஷமானது.



Access Graphics

ஏக விநியோகஸ்தர்கள்:
**சென்ற் அந்தனீஸ் ஹார்ட்வெயார் (பிரைவேட்) லிமிட்டட்**
காட்சியறை: 524, ஸ்ரீசங்கராஜ மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 2324261-5, 2337283-5, 2436779 பெக்ஸ்: 2446554

விநியோகஸ்தர்:
நாராயணா கட்டிடப்பொருட்கள் வர்த்தகர். 95/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

---

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட
பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
*100% சுத்தமானது!*
*உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்*
றோயல் குளுக்கோஸ் தாருங்கள்! என்று கேட்டு வாங்குங்கள்!
PACKED BY:
**ROYAL** Industries Colombo 12
☎ : 0112334603
அனைத்துப் பாமஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம் →
(C/36310)




ஏக விநியோகஸ்தர்கள்:-
**சிவா நறுமணப் பூங்கா**
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
☎ : 021 222 2567

---

## காரைநகர் பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்
### விசேட அறிவித்தல்

கடந்த ஐந்து வருட காலமாகப் பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயிலுக்கு அம்பிகை அடியார்கள் பலவிதமான நன்கொடைகள், நிதி உதவி, தங்க நகைகள் மற்றும் பல பொருள்களை அறங்காவலர் சபைக்குத் தாங்களாகவே முன்வந்து உதவியுள்ளீர்கள்.

தற்சமயம் அறங்காவலர் சபையில் **நிர்வாக மாற்றம் ஏற்பட்டுள்ளமையால்** இக்கோயிலுக்கு நன்கொடை செய்ய விரும்பும் அம்பிகை அடியார்கள் நிதி உதவியைப் பணமாகவோ அல்லது பொருள்களாகவோ அன்பளிப்புச் செய்யவிரும்புவோர்கள் அறங்காவலர் சபைத் தலைவரிடம் நேரடியாகக் கொடுத்துப் பற்றுச் சீட்டினைப் பெற்றுக்கொள்ளவும்.

அன்பளிப்புச் செய்யவிரும்பும் அடியார்கள் அதனைக் காசோலையாகவோ **(Crossed & Account Payee only)** காசுக்கட்டளையாகவோ பதிவுத் தபால் மூலம் பின்வரும் முகவரியில் இருக்கும் இலங்கை வங்கிகளிலுள்ள இக்கோயிலின் கணக்கில் வைப்புச் செய்யவும்.

*பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்*

| | |
|---|---|
| இலங்கை வங்கி, | இலங்கை வங்கி, |
| City Office, | Second City Branch |
| A/C No.01000.200.762.3 | A/C No. 500.01.1159.4 |
| பிறிஸ்டல் வீதி, | ஸ்ரான்லி வீதி, |
| கொழும்பு 01. | யாழ்ப்பாணம். |

நன்கொடை நிதியை நேரடியாக வைப்புச் செய்த ரசீத்தை *(Deposit Slip)* அறங்காவலர் சபைத் தலைவர், 98, விவேகானந்த மேடு கொழும்பு-13 என்ற விலாசத்திற்கு அனுப்பி கோயில் பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்.

பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் பெயரால் வேறு எவருக்கும் எக்காரணம் கொண்டும் கோயில் மனேஜரிடமோ அல்லது வேறு அங்கத்தவர்களிடமோ பண உதவி, பொருளாகவோ அல்லது தங்க நகைகள் எதனையும் கையளிக்கவேண்டாம் என்றும் அம்பிகை அடியார்களை மிகவும் தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

தேவை ஏற்படின் அறங்காவலர் சபைத் தலைவரிடம் (ரெலிபோன் 0.11.2 344045) தொடர்புகொள்ளவும்.

தலைவர், அறங்காவலர் சபை,
பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில்.

---

# இருபத்தைந்தாவது ஆண்டு நினைவஞ்சலி
## அமரர் கார்த்திகேசு வைத்தியலிங்கம்

(உரிமையாளர், வைத்தியலிங்கம் மரக்காலை, யாழ்ப்பாணம்)



மனம் சிறந்த புண்ணியனே, கற்றார் போற்றும்
வைத்தியலிங்கம் பேர்படைத்த ஞானக் குன்றே!
இனம் சிறந்த பண்பு,கொடை, தெய்வ சிந்தை,
இசை, சிறந்த சமூகப்பணி இவற்றினோடே
தனம் சிறந்த தொழிலாற்றி, ஒன்பான் மக்கள்
தவம் சிறந்த மாண்பினராய் வாழ வைத்துக்
கனம் சிறந்த கைலாயபதிதாள் பெற்றாய்
கண்ணியனே உனைநினைந்து
போற்றுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(36234) (13-16-38)

**தோற்றம்**
**17-07-1913**

**மறைவு**
**20-08-1979**

இல.110, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளின் தலைமைத்துவத்தை நம்பிக்கை, பணிவுடன் பக்தர்கள் ஏற்றுக்கொள்ளும் பக்குவம் நல்லூரில்

திருமதி சுசிலாராஜா முகாமைத்துவ ஆலோசகர் என்பதோடு, பெண்களுக்கு எதிரான அநீதியான அடக்குமுறைகளுக்கு எதிராகப் போராடியவர். தொழிற்சங்களில் அங்கம் வகித்துப் பணியாற்றியவர். லண்டன் தொழிற்கட்சியில் சேர்ந்து செயற்பட்டவர். DEMONT FORT VALUE BASED TRAINING பகுதிக்கு ஆலோசகராக இருந்தவர். LEICESTER பல்கலைக் கழகத்தில் வரவு விரிவுரையாளராக இருந்தவர். உதயனுக்கு அவர் வழங்கிய செவ்வியின் முதலாவது பகுதி கடந்த வாரம் உதயனின் சூரியகாந்தியில் வெளியாகியது. இன்று அதன் இரண்டாவது பகுதி பிரசுரமாகிறது.

*கேள்வி:* தாங்கள் சிறந்த முகாமைத்துவ ஆலோசகர் என்ற முறையில் நல்லூர் கந்த சுவாமி கோயிலை எவ்வாறு பார்க்கிறீர்கள்?

*பதில்:* முகாமைத்துவப் பக்தை என்ற கண்ணோட்டத்தில் பட்டதைச் சொல்கிறேன். பணிமனைகளில் தற்போது முகாமைத்துவம், தலைமைத்துவம் என்பன பிரச்சினைக்குள்ளாகியிருக்கின்றன. பூரணத்துவமான திட்டமே இலக்கை அடைவதற்கு உதவி செய்வது போல் தென்படுகிறது. திறன்கள் சிறந்த தலைமைத்துவம் - சுயநலமற்ற பிறர்நலம் கருதும் தலைமைத்துவம் பலரையும் அணைத்து வேலைத் திட்டத்தை அமுல்படுத்தக்கூடிய திறமை தேவை. மற்றது குழுவேலை, ஊக்குவிக்கப்பட்ட தொழிலாளர்கள் அர்ப்பணிப்புடன் வேலைசெய்யக்கூடிய தொண்டர்கள் சளைக்காமல் இலக்கை நோக்கிய வேலையைத் திறமையாக - வினைத்திறனோடு செய்யக்கூடியதாக இருக்க வேண்டும். இவை ஒரு நிறுவனத்தில் இருந்தால் தான் வெற்றிகரமாக வேலைத் திட்டங்கள் சக்திவாய்ந்தவையாக முழுப்பயனையும் பயனாளிகள பெறக்கூடியவாறு நிகழும்.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வெளிப்படுகிறது; சூத்திரதாரி ஒருவர் இருக்கிறார். அவர் தான் கலியுக வரதன். அவரின் தலைமைத்துவத்தை நம்பிக்கையுடனும் பணிவுடனும் அனைவரும் ஏற்றுக்கொள்ளகிறார்கள். எஜமானுடைய முகாமைத்துவம் பலரையும் அணைத்து வேலைகளைப் பகிர்ந்தளித்து செய்யும் முகாமைத்துவம் மிகவும் சிறப்பாக நடக்கிறது. ஏனெனில், அதற்குத் தக்கவாறு அங்குள்ள அந்தணர்கள் பக்தியோடும் பாவத்தோடும் தெய்வங்களுக்குள் ஆவாகனம் பண்ணப்பட்டிருக்கும் சக்தியை உயிரூட்டி வெளிப்படுத்துகிறார்கள். நாதஸ்வர மேள இசைக் கலைஞர்கள் நாதாஞ்சலி செய்ய குறிப்பிட்ட நேரத்தில் தயாராக இருக்கிறார்கள். மற்றும் பணியாளர்கள் ஊக்கத்துடனும் அர்ப்பணிப்புடனும் தமது வேலை நேரத்திற்கு அப்பாலும் தமக்களிக்கப்பட்டுள்ள பணியைத் திறமையுடன் செய்து முடிக்கிறார்கள். தொண்டர் படையினர் கலியுகவரதனே பெருமைப்படும் வகையில் வாகனங்களைக் காவியும் சப்பறம், தேர் போன்றவற்றில் சுறுசுறுப்பாக சுவாமியை ஏற்றியும் வெளிநாட்டவரே வியக்கும் வண்ணம் குறிப்பிட்ட நேரத்தில் மிகச் சிறப்பாகச் செய்துமுடிக்கிறார்கள். நல்லூர்க் கந்த

## முகாமைத்துவ சமூகவியல் நிபுணரின் ஆன்மீக அனுபவம் பேசுகிறது

சுவாமி கோயில் தனது இலக்கை - ஆத்மீகத்தை வளர்க்கிற வேலை ஈடேறும் வண்ணம் மக்களைக் கவர்ந்து பக்தியையும் பரவசத்தையும் ஊட்டி அவர்களைத் தியானத்தில் ஈடுபடுத்துகிறது. சூழவுள்ள மடங்கள் , மண்டபங்கள் அன்னதானம் செய்தும் கலை, கலாசார, சங்கீத நிகழ்ச்சிகளை நடத்தியும் அனுசரணை வேலைகளைச் (SUPPORTIVE WORK) செய்கின்றன.

### கடவுளுடன் உறவு தேவை

இந்த மிலேனியத்தில் 21 ஆம் நூற்றாண்டில் கடவுளுடன் ஓர் உயர்ந்த உறவை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்று தான் ஞானிகள், சுவாமிமார்கள் கூறுகிறார்கள். நாம் சகோதரனாகவோ, தம்பியாகவோ, அண்ணனாகவோ, தாயாகவோ, மகனாகவோ, காதலனாகவோ, காதலியாகவோ, நண்பனாகவோ ஓர் உறவை ஆண்டவனோடு ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட உயர்ந்த உறவு வரும் போது தான் பூரணத்தை நாம் அடைகிறோம். நமக்குள் இருக்கும் இந்த ஆண்டவனை நாம் வீட்டுக்கோ, வேலைத் தளங்களுக்கோ, சமுதாயத்திற்கோ கூட்டிச் செல்லக்கூடாதா? ஏனெனில், அந்த ஆண்டவன் நம்முள் இருக்கும போது நாம் அன்புடனும் ஆதரவுடனும் கரிசனையுடனும் நமக்குள் புதைந்து கிடக்கும் திறமைகளை வெளிக்கொணர முடியும். இது வாழ்க்கையின் தத்துவமல்லவா?

## இதற்கு முகாமைத்துவத் திறமையும் பெரும் பங்களிப்புச் செய்கிறது

நல்லூரில் இருக்கும் முருகன் வாழும் கடவுள் (Living God) ஆவார்.



நல்லூரில் அறுமுகவேலவன் பக்தர்களுக்கு அருள்சுரக்க வீதிவலம் வரும் காட்சி.

நல்லூர்க் கந்தனுக்கு ஏன் இவ்வளவு மகிமை என்று பலரையும் கேட்டேன் . எல்லாவற்றையும் நேரத்திற்கு செய்தல். எவ்வளவு சனக்கூட்டமிருந்தாலும், கந்தன் காலை ஏழு மணிக்கு தேரேறி வரும்போது கோபுர வாசலில் தோன்றுவார் என்றால் சரியாக ஏழு மணிக்கு காலைச் சூரியனின் மஞ்சள் வெயில் விழ ஜொலித்துக் கொண்டு அங்கு அவர் தோன்றுவார்.

கோயிலில் சதா பூசை, சதா உற்சவம், சதா ஹோமம் நிகழ்கிறது. ஓமம் ஒவ்வொரு நாளும் வளர்த்தல். இது தான் மகிமையின் இரகசியம் என்று பலரும் சொல்கிறார்கள்.

வெளிநாட்டவர் வரும்போது யாழ்ப்பாணத்தில் என்ன பார்க்க இருக்கிறது என்றால் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைத் தான் என்று சொல்கிறார்கள்.

### நல்லூர் முருகன் கோயிலில் பல பாடங்களைக் கற்கலாம்

யாழ்ப்பாணத்திலுள்ள பல நிறுவனங்கள் சரியான பூரணத்துவமின்றி சரியான முகாமைத்துவம் தலைமைத்துவமின்றி தத்தளித்துக் கொண்டிருக்கும்போது கலங்கரை விளக்கம் போல் தெரியும். நல்லூர் முருகன் கோயிலிலிருந்து சில பாடங்களை ஏன் கற்றுக்கொள்ளக்கூடாது? கற்றுக்கொண்டு ஏன் ஆத்மீக திருப்தியடையக் கூடாது? அப்போது தான் யாழ்ப்பாணம் மீண்டும் ஆத்மீக சமாதான பூரணத்துவ பூமியாக மாறும்.

பழமையும் புதுமையும் ஆகம முறைகளையும் கிராமிய முறைகளையும் நல்லூர்க் கோயில் சமன் பண்ணுகிறது. புதுமையைத் திறனாய்வு செய்யவில்லை. நல்லூர்க் கந்த சுவாமி கோயிலின் சூழலில் தியானம் செய்வதைப் பார்க்கவேண்டுமென்று ஒடித்திரிந்து இடிப்பட்டுப் பார்ப்பதில் ஈடுபாடின்றி அந்தச் சக்தியை நிஷ்டையில் செலுத்தி இருந்து கொண்டு பூசையை அனுபவிக்கிறார்கள். எதிர்காலத்தில் நல்லூர் முருகன் கோயில் அதிகமானோர் தியானம் செய்யும் இடமாக மாறுமோ தெரியாது.

### கதிர்காம யாத்திரை அனுபவம்

*கேள்வி:* நீண்ட விளக்கமே கொடுத்து விட்டீர்கள். இவை அனைத்தும் மக்களால் பின்பற்றப்பட்டு நிஜமாகி யாழ்ப்பாணம் புண்ணிய பூமியாக மாறவேண்டுமென்றே நானும் நினைக்கின்றேன். யாவரும் இதை ஒப்புக்கொள்வர். தாங்கள் இவ்வருடம் கதிர்காமக் கந்தன் கோயிலுக்குப் பாதயாத்திரை சென்றீர்கள் என அறிகின்றேன். பாதயாத்திரை மேற்கொள்ள வேண்டுமென்ற எண்ணம் எவ்வாறு தங்களுக்கு ஏற்பட்டது?

*பதில்:* நான் முன்னரே குறிப்பிட்டேன். மலேசியாவில் நல்லூர் முருகன் பற்றிய ஓர் ஆய்வுரைக் கட்டுரையை அருள்மிகு முருகன் மாநாடு என்ற சர்வதேச மாநாட்டில் நவம்பர் 2003 இல் சமர்ப்பித்தேன். அங்கு பற்றிக் ஹரிஹரன் (PATRICK HARRIGAN) என்பவர் கதிர்காம பாதயாத்திரை பற்றிய ஓர் ஆய்வைச் சமர்ப்பித்தார். அப்போது நானும் பாத யாத்திரையில் போகலாம் என எண்ணினேன்.

*செவ்வியாளர்:* திரு.பற்றிக் ஹரிஹரன் அவர்களா? அவரை எனக்கும் நன்கு தெரியும். 1990 இல் ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணியசுவாமி கோயிலில் நான் தங்கி நின்றபோது அவர் கோயிலினுள் வந்து வழிபட்டார். நான் அவரோடு ஆங்கிலத்தில் உரையாடினேன். அப்போது அவர் இனிய தமிழில் பதில்தந்தார். நான் ஆச்சரியத்துடன் தமிழை எங்கு கற்றீர்கள் என்ற கேட்டபோது சென்னையில் இரண்டு வருடம் கற்றதாகச் சொல்லியதோடு கதிர்காமக் கந்தன் பாதயாத்திரையில் அப்போது சென்ற சில படங்களைக் காட்டி கதிர்காமக் கந்தன் பற்றி ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதுவதாகவும் சொன்னார். அவரை நான் கொழும்பில் அப்போது நடைபெற்ற எனது நூல் வெளியீட்டு விழாவில் தமிழில் பேசவைத்தேன். அழகான தமிழில் 15 நிமிடநேரம் பேசியது இப்போதும் எனது நினைவில் நிற்கிறது.

*பதில்:* என்ன ஆச்சரியமான சந்திப்பு பார்த்தீர்களா?

பாதயாத்திரை ஏன் என்று நான் என்மனதில் கேட்டுக்கொண்ட போது ஓர் உந்தல் ஏற்பட்டது. திரு.பற்றிக் ஹரிகன் தலைமையில 2004 மே 21 ஆம் திகதி தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் இருந்து கதிர்காமத்திற்கு பாத யாத்திரை புறப்பட்டோம்.

*கேள்வி:* எப்போது பாத யாத்திரையில் கதிர்காமம் அடைந்தீர்கள்? எத்தனை பேர் சென்றீர்கள். தங்கள் அனுபவங்களைப்பற்றிக் கூறுவீர்களா?

*பதில்:* ஆரம்பத்தில் நாங்கள் 10 பேர் தான் புறப்பட்டோம். யால வனவிலங்கு சரணாலய பகுதியை அடையும்போது 700 - 800 ஆகப் பெருகிவிட்டது. பாதயாத்திரை 60 நாள்கள் எடுத்தது. 2004 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 17 ஆம் திகதி கதிர்காமம் சென்றடைந்தோம். இம்முறை தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் கோயிலில் இருந்து புறப்பட்டோம். அடுத்த யாத்திரை நல்லூர் கந்தசுவாமி கோயிலுக் கூடாகவும் செல்ல விருப்பம்.

பாதயாத்திரையில் 300 இற்கும் மேற்பட்ட கோயில்களைக் கண்டோம். சாதாரண மக்களோடு பழகும் வாய்ப்புக்கிடைத்தது. பாத யாத்திரையில் செல்லாமல் விட்டிருந்தால் இவர்களைச் சந்தித்திருக்க முடியாது. அவர்களின் அருமையான குணங்களை, பண்புகளை அறிய வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. எம்மைப் பற்றி விளக்கிக் கொண்டேன்.

பாதயாத்திரையில் எனக்கு ஒரு பரீட்சை தவசு எப்படி இருக்கும் என அனுபவித்தேன். நாம் கொண்டு சென்றது இரண்டு உடுப்புக்கள் தான், நாம் சாப்பிட்டது அன்னதானம் படுத்துறங்கி வீதி ஓரங்களிலும் கோயில்களிலும். எதிர்பார்ப்பும் இல்லை, வசதிகளும் இல்லை; பொறுப்பும் இல்லை; உலகத்தை உலகமாகக் காண்பதற்கு ஒரு சிறிய மிக - அரிய சந்தர்ப்பம். கடலிலும் தாமரைக் குளங்களிலும் குளித்தோம். தர்க்கவியல் சில இடங்களில் தோற்றுவிடும் என்பதையும் பாதயாத்திரை அனுபவங்கள் தர்க்கவியலையும் தாண்டியது.

யாலவில் மிருகங்களோடு வாழ்ந்தோம் என்று தான் சொல்லவேண்டும். மிருகங்கள் எங்கோ ஒளித்துக்கொண்டன. இருப்பினும் கரடிகளின் உறுமல், சண்டைபிடிக்கும் சத்தம் கேட்டது. யானைகள் மரம், தடிகளை முறிக்கும சத்தம் கேட்டது. நாங்கள் நெருப்பை மூட்டி விட்டு அதில் சுற்றிப் படுத்துறங்கினோம்.

பத்து நாள்களில் யாலவினூடாக 32, 000 பேர் கதிர்காமம் போனதாக STF (Special Task Force) சொல்லியுள்ளது.

### எல்லோரிடத்திலும் அன்பு காட்டுங்கள்

மற்றவர்களை விட நாம் பெரியவர்கள் என்று நினைக்கின்றோம். அப்படியாகத்தான் பாடுபடுகிறோம். ஆனால், ஆத்மீக ரீதியாகப் பார்க்கும்போது நாம் எல்லாம் ஒன்றுதான். நாம் ஒரு சின்னத் துளிதான். இதற்குள் நான் பெரியவன் என்ற (Ego) பிரச்சினைகள். நாம் எம்மைப்பற்றி ஆராய்ந்து விளக்கத்தைத் தேடும்போது இன்று இருப்பது நாளை இருக்கப்போவதில்லை. உண்மையில் எல்லோரிடத்திலும் அன்பாய் இருக்க வேண்டும். வேறு ஒன்றுமே செய்யத் தேவையில்லை. இதைத்தான் சும்மாயிரு என்று யோகர் சுவாமிகள் சொன்னார் போலும். எமது MAP பெரிது. எது பெரிது; எது சிறிது என்று பார்க்கிறோம். ஆனால், MESSAGE ஐ விட்டு விட்டோம். ஆண்டவனை நினைத்துருகி எப்போது இணைக்கிறோமோ அப்போது தான் தெய்வீகத்தன்மை வரும்.


செவ்வி:
இர.சந்திரசேகரசர்மா

பலரும் பாதயாத்தரையில் பங்குபற்ற வேண்டும்.

*கேள்வி:* இம்முறையும் நல்லூர் உற்சவ காலத்தில் வந்திருக்கிறீர்கள். உங்கள் அனுபவங்கள் பற்றி...

*பதில்:* இம்முறையும் வந்துள்ளது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். காலையும், மாலையும் நல்லூர் முருகனிடம் செல்கிறேன். முக்கியமாக காலையில் யாக பூஜையில் ஈடுபடுகின்றேன். இடிபட்டுக்கொண்டுபோய் யாக வாசலில் நின்று பார்க்க வேண்டுமென்பதில்லை. தூரத்தில் நின்றே நிஷ்டையில் நின்று அதனை அனுபவித்துக் கொள்கிறேன்.

இம்முறை நல்லூரில் பக்தர் கூட்டம் அதிகமாகவே உள்ளது. போரினால் பல கஷ்டங்களுக்குள்ளாகியோர், இடம்பெயர்ந்தவர்கள்,



பாத யாத்திரையில் பங்குகொண்ட பற்றிக் ஹரிஹறன், 14 வருடங்களுக்கு முன் செவ்வியாளரின் நூல் வெளியீட்டு விழாவில் கொழும்பில் கலந்துகொண்டவேளையில்...

வீடுகளை, இருப்பிடங்களை இழந்தவர்கள், மனப்பாதிப்புக்குள்ளாகியோர், நெருக்கீடுகள் மனவருத்தங்களுக்கு மத்தியில் வாழ்வோர், மிதிவெடியால் பாதிக்கப்பட்டோர் எனப்பலரும் எல்லாத்துன்பங்களையும் கலியுகவரதனிடமே வைத்துவிட்டு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். இதனையே நான் காண்கின்றேன்.

கலியுகவரதன், அலங்காரக்கந்தன் உடைந்து போயுள்ள மனங்களுக்கு அருளும், ஆறுதலும் அளிப்பார். அவர் அலங்கரித்துக்கொண்டு மக்கள் வெள்ளத்திலும் இளம் வெய்யிலிலும் பஜனை ஒலியிலும் மிதந்து, வீதி உலாவரும் போது எமக்கு வாழவேண்டும் என்ற ஆசையை உண்டாக்குகிறார். எம்முள் இருந்து எம்மை வாழவைப்பவரும் அவரே!.

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீ. (சாதாரண தர) மாதிரிப் பரீட்சை 2004
## கணிதம் II பத்திரம் I - விடைகள்

01) ஒரு புறக்கோணம்
= 180-135 =45°

பக்கங்கள் = $\frac{360}{45}$ = 08

02) $\frac{7}{100}$ x 0.5x1000
= 35 மிமீடங்கள்

03) $\frac{0.0093}{0.00311}$ + (0.3x0.02)
= 3+0.006
= 3.006

04) $\sqrt{(100-7)(100+7)+7^2}$
= $\sqrt{100^2-7^2+7^2}$
= $\sqrt{100^2}$
= 100

05) X=85°
Y=65°

06) $\frac{1260}{90}$ x100 =1400 ரூபா

07) $\frac{53\ cm^3}{10.6\ cm^3}$ = 5 cm

08) $\frac{7+10}{2}$ x AB = 34
17 AB = 68
AB = 4cm

09) $\frac{84}{4}$ x 10 = 210 ரூபா

10) $12^2+9^2 = AO^2$
$144+81 = AO^2$
AO $=\sqrt{225}$
= 15 cm

11) இரு எண்கள் x, 7-x
$x^2 + (7-x)^2 = 25$
$x^2 + 49 - 14x + x^2 = 25$
$\frac{2x^2 - 14x + 24}{2} = 0$
$x^2 - 7x + 12 = 0$
$(x-3)(x-4) = 0$
x=3 or x=4
இரு எண்களும் 3, 4 ஆகும்.

12) y = 3x

13) $(3-1)+\frac{1}{2}(3+1)$
2+2 = 4

14. I. PCQ
II. n(xny)= 7

15. A = 4+(4x3)
=4+12
=16

16. $\frac{x^2-x-x+1}{5(x-1)}$
$= \frac{(x-1)(x-1)}{5(x-1)}$
$= \frac{(x-1)}{5}$

17. Tn = 3n-4
1ஆம் உறுப்பு = 3-4 =-1
2ஆம் உறுப்பு = 6-4 = 2
3ஆம் உறுப்பு = 9-4 = 5

18. 0.00000271

19. PC=SC-SF
PC=SC-SF
C=$\frac{-SF}{P-S}$
அல்லது
$\hat{C} = \frac{SF}{(S-P)}$

20. Qsr = 20°
Qpr = 50°

21. உண்மை இடை
= 69+$\frac{(-46)}{23}$
=69-2 = 67 புள்ளிகள்

22. $\frac{35}{70}$x360x5 = 900 ரூபா.

23. $\frac{5000m}{100m}$ + 1 = 51 கம்பங்கள்.


24. $2^x X (2^3)^x = 256$
$2^x X 2^{3x} = 256$
$2^{4x} = 2^8$
4x = 8
x =2

25. (4rx4r) - $\frac{4x2\pi r}{2}$
= $16r^2 - 4\pi r$

26. $\frac{4cm}{AB}$ = 0.5
AB = 8cm
BC = 10 - 8
= 2cm

27) $111032_{நான்கு}$

28) 9x50.000cm
9x500m
= 4500m
=4.5 km.

29)


கோண இருசமகூறாக்கி

30) I. $N\hat{X}Z = 59°$
II. 288°





முதலாவது
பிறந்தநாள் வாழ்த்து

மல்லாகத்தில் வசிக்கும் (நெசவுசாலை வீதி)
வீமன்காமத்தைச் சேர்ந்த
ஜெகநாதன் - சுகுணா
தம்பதிகளின் அருந்தவப்புதல்வன்
திருவளர்செல்வன் தர்மிலன்

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (12.09.2004) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

செல்வன் தர்மிலனை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா (கனகரத்தினம்), அம்மம்மா, சித்திமார், மாமாமார், பெரியப்பா (குருநாதன்), சுவிஸில் வசிக்கின்ற சுமதி அம்மம்மா குடும்பத்தினர், நோர்வேயில் வசிக்கும் யோகலிங்கம் அம்மப்பா குடும்பத்தினர், பிரான்ஸில் வசிக்கும் பாமி அப்பப்பா மற்றும் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற தாத்தாமார், பூட்டன்மார், அம்மப்பாமார், அம்மப்பா, சித்திமார், சித்தப்பாமார், மாமாமார், மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார், அக்காமார், அண்ணாமார், தங்கை மற்றும் உற்றார், உறவினர்கள், குடும்ப நண்பர்கள் அனைவரும் செல்வச்சந்நிதி முருகன் அருள்பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ்க என்று உளமார வாழ்த்துகின்றார்கள்.

நெசவுசாலை வீதி,
மல்லாகம்.

(36276)(34-19-42)


## இணைந்த சேவை அலுவலர்களின் இடமாற்றம்

தென்மராட்சி,செப்.12

உள்ளூராட்சித் திணைக்கள இணைந்த சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான 2005 ஆம் ஆண்டுக்குரிய இடமாற்றப் பட்டியல் திருகோணமலை மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

உத்தியோகத்தர்கள் உள்ளூராட்சி மனறங்களுக்கிடையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறப்பட்டது.

எதிர்வரும் 15 ஆம் திகதி இடமாற்றப் பட்டியல்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் -

இடமாற்றல் மேன்முறையீடுகள் ஒக்ரோபர் 15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(எ-117)

## திருட்டு மின்சாரம் பெற்ற அறுவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,செப்.12

அச்சுவேலி, கதிரிப்பாய், தம்பாலை மற்றும் வளலாய் ஆகிய பகுதிகளில் திருட்டுத் தனமாக மின்சாரம் பெற்று வந்த 6 பேருக்கு மல்லாகம் நீதிமன்றில் தலா 5ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் மின் அத்தியட்சகர், அலுவலக உத்தியோகத்தர்கள், அச்சுவேலிப் பொலீஸார் சகிதம் கடந்த வியாழன்று மேற்கொண்ட திடீர் சோதனையின்போது இந்த 6 பேரும் திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்றமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து மேற்படி 6 பேரும் மல்லாகம் நீதிமன்றில் நேற்று முன்தினம் ஆஜர் செய்யப்பட்ட போது 6 பேருக்கும் நீதிமன்றினால் தலா 5ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

தம்பாலையைச் சேர்ந்தவர்களான சபாபதி நல்லையா, இராஜரட்ணம் இந்திரேஸ்வரன் வளலாயைச் சேர்ந்த துரைராஜா ஜெயரூபி கதிரிப்பாயைச் சேர்ந்தவர்களான கந்தையா கிருஷ்ணபிள்ளை, இந்திரலிங்கம் இந்திரகுமார் அச்சுவேலியைச் சேர்ந்த பாலசிங்கம் ஜெயநீதபாலன் ஆகியோரே மன்றில் ஆஜர் செய்யப்பட்டவர்களாவர். (10)

## கட்டாக்காலிகளால் பயிரழிவு

கோப்பாய் மத்தி, வடக்கு பகுதிகளில் கட்டாக்காலி கால்நடைகளால் பெரும் பயிரழிவு ஏற்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். சம்பந்தப்பட்டோரிடம் முறையிட்டும் இதுவரை உரிய நடவடிக்கை எதுவும் எடுக்கப் படவில்லை என்றும் அவர்கள் கூறினர். (எ-72)


தொட்டுச் செல்லும் நினைவுகள்
நெஞ்சை விட்டுச் சென்றிடுமோ?

நிலைக்க வந்தது 1959 - 07 - 25



நிலையாது சென்றது 1989 - 08 - 29

திருமதி இரத்தினசிங்கம் சூரியமலர்
(மலர்/சூர்யா)
திதி: திரயோதசி 2004.09.12

தாயே - எம் பருவம் வரை
நீர் உயிர் சுமந்திருக்கக் கூடாதோ?
விருத்தெரிந்து - நாம் உருக்கொள்வதற்கிடையில்
விதிகொண்டு சென்றதோ?
உலக உயிர்கள் அத்தனைக்கும் தாயை வைக்கும்
இறைவனவன்......
எமக்கு மட்டும் வஞ்சனையை இவ்வுலகில்
வைத்தது ஏன்?
அரவணைக்க வேண்டியோர் அகன்று நிற்க
சின்னவயதில் சிலுவையைச் சுமந்தோம்
உங்கள் நினைவால் ஊமையாய் அழுதோம்
இன்று நிமிர்ந்து விட்டோம்
அதைப் பார்க்க நீங்கள் இல்லை
நல்லைலத் தேரன்று விட்டுச் சென்றீர்.....
எல்லையில்லாத் துன்பம் வருகிறது அந்நாளில்!
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உங்கள் நினைவோடு:
கணவர்: இரத்தினசிங்கம்
மகன்கள்: விஜய், ரவிநாத் (பிரான்ஸ்)
மற்றும் மருமகள், உறவினர்கள்.

த.மு.:வீடியோ சூர்யா,
தியேட்டர் லேன், இணுவில் கிழக்கு.
நி.மு.:சந்தை வீதி, K.K.S.

(36307)(34-42-19)

இருவிழிகளும் இமைக்க மறந்த
9 ஆம் ஆண்டில் ஒன்றாத சோகத்துடன்...

ஓரடியாக 25 - 01 - 1963



ஆறடியாக 12 - 09 - 1995

செல்வி சாந்தி மகேந்திரன் B.A., Trained
(ஆசிரியை. யா/அச்செழு சைவப்பிரகாச வித்.)

ஒன்பதாம் மாதத்து ஒன்றாத சோகம்
ஒன்பதாண்டை தாண்டிடினும்!
நேற்றைய நினைவுகளாய் - எம்
நெஞ்சமதை கண்ணீரால் நிறைத்திடவே
காலனின் கணக்கு கணை வடிவில் வந்து
காலத்தால் கிட்டியதோ - உனக்கு
விதி வலிது தெரிகிறது - எனினும்
மனந்தான் பேதலிக்கிறது
சாந்தியென மீண்டொருகால் பாரிற்கு வாராயோ...?

உம் நினைவுகளைச்
சுமந்தவர்களாக:
- குடும்பத்தினர்.

அச்செழு,
நீர்வேலி.
(சி36283)(34-42-19)

MEDICINE IN RUSSIA
SMOLENSK STATE MEDICAL ACADEMY
DOCTOR OF MEDICINE (MD)
IN ENGLISH (6 Years)
Internationally Recognized Including British
Srilanka Medical Council and W.H.O
1800 us $ Per annum

குறைந்த கட்டணத்தில் கற்பதற்கும், A/L பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதோருக்கும் அரியசந்தர்ப்பம்.

Admission மற்றும் மேலதிக தகவல்களை சிரேஷ்ட மருத்துவ மாணவர் மூலம் நேரடியாகப் பெற்றுக்கொள்ளலாம்.
T.SAYANTHAN 0777 316273
SMOLENSK FRIENDSHIP MEDICAL ASSOCIATE
XB 2/2/4, Housing Scheme Edmondon Road,
KIRULAPONA.

"LUXMY COURT"
NO.33, Rudra
Mawatha
Wellawtta.

672, K.K.S. Road
Nachchimar kovilady
Jaffna.
021-222 2536

e.mail - smolensk medical @ hotmail.com
தமிழ் மாணவர்கட்கு சிறந்த வாய்ப்பு
குறிப்பிட்ட அளவு மாணவர்களுக்கே அனுமதி

C/37570(42-19)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதி நிலைக்க வேண்டும் என்பதே அனைவர் மூச்சிலும் கலந்திருக்கிறது

## யாழ். ஆயர் உரை

வலி.வடக்கு,செப்.12

அமைதி நிலைக்க வேண்டும் என்பதே இன்று அனைவரினதும் பேச்சிலும் மூச்சிலும் கலந்துள்ளது. இன்று சமாதானம் வரவேண்டும்; நிலைக்க வேண்டும் என்பதற்காக நாம் அனைவரும் ஏங்கிக்கொண்டு இருக்கின்றோம்.

மேற்கண்டவாறு ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை குறிப்பிட்டார்.

ஏழுகல்லூரிகள் கலந்துகொள்ளும் சமாதான உதைபந்தாட்டப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் தலைமையில் இடம்பெற்றன.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆயர் தொடர்ந்து உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

இளைஞர்களாகிய நீங்களும்கூட இங்கு சமாதானம் கொண்டுவரப்படவேண்டும் என்பதில் தெளிவாக இருக்கின்றீர்கள். சமாதானம் வேண்டியே இப்போட்டிகளிலும் கலந்துகொள்கின்றீர்கள். இத்தகைய முயற்சிகள் வரவேற்கத்தக்கதும் பாராட்டப்பட வேண்டியதும் ஆகும்.

சமாதானம் வேண்டி இன்று பல வழிகளிலும் பல முன்னெடுப்புகளையும் பலர் மேற்கொண்டுள்ளார்கள். நாங்கள் அனைவரும் ஒருவர் மேல் ஒருவர் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

சமாதானம் என்பது உள்ளத்திலும் ஆயுதத்திலும், சமூகத்திலும் ஏற்படவேண்டும். இதற்காக நாங்கள் அனைவரையும் அழைக்கின்றோம். சமாதானம் செல்வோர் பேறுபெற்றவர்கள் ஆகும். சமாதானத்திற்காகப் பாடுபட்டவர்களும் பேறுபெற்றவர்கள் ஆவார்கள்.



சமாதானம் எங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்றடைய வேண்டும் இதற்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன் - என்றார்.

(ப-86)

# புலம்பெயர்ந்தோர் தம் இலக்கியங்களை தேசிய உணர்வுடன் படைக்கிறார்கள்

யாழ்ப்பாணம்,செப்.12

தமிழ்த்தேசிய வாத உணர்வுடன் புலம்பெயர்ந்த தமிழர்களின் கலைப்படைப்புக்கள் வெளியிடப்படுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

- இவ்வாறு எழுத்தாளர் அ.யேசுராசா தெரிவித்தார்.

அண்மையில் சிரித்திரன் சுந்தரின் நினைவாக யாழ்.பல்கலைக்கழகப் புவியியற்றுறை மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்ட 'காலம்' சஞ்சிகையின் 22ஆவது மலர் வெளியீட்டில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

- சஞ்சிகையின் ஆசிரியர் செல்வம் உரையாற்றுகையில்-

பல்வேறு நூல்களை வாசிக்கும் பழக்கமே எனக்கு இத்தகைய நூல்களை உருவாக்கத் தூண்டியது. பல்வேறு நூல்களை வாசிக்கப் பழக்கப்படுத்திக் கொண்டதன் விளைவாகப் பல நூல்களை வெளியிடவேண்டும் என்ற ஆவலைப் பலகாலமாகக் கொண்டிருந்தேன். அதன் விளைவாக எடுத்தமுயற்சியால் 12 வருட காலங்களில் 23 இதழ்கள் வெளியிடப்பட்டுள்ளன - என்றார்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய ஊடகவியலாளர் மதுசூதனன், 1987ஆம் ஆண்டுக்கு முன் படைக்கப்பட்ட இலக்கியங்கள் ஒரு வகையிலும் அதன் பிறகு படைக்கப்பட்ட இலக்கியங்கள் வேறொரு வகையிலும் அமைந்துள்ளன. இவ்விலக்கியங்கள் சமகால ஈழத்து அரசியல் தொடர்பான பல விடயங்களைத் தாங்கிநிற்பவையாக அமைந்துள்ளன - என்றார்.

நிகழ்வில் பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர்.

(ப-201-203)

# அழிந்த கட்டடங்களைச் சீர்செய்ய வெளிநாட்டிலுள்ளோரே முன்வருக!

## அரச, அரச சார்பாற்ற நிறுவனங்களை நம்பியிருக்க முடியாது

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளால் அழிந்துபோன பாடசாலைகள், ஆலயங்கள், வைத்தியசாலைகள், வீடுகள் எல்லாவற்றையும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள் செய்துதரும் என்று எண்ணியிராது வசதி படைத்தவர்கள் வெளிநாட்டிலுள்ளவர்கள் பழைய மாணவர்கள் போன்றோர் இவற்றை




அமைத்துத்தர முன்வரவேண்டும்.

- இவ்வாறு வடமராட்சி முன்னாள் கல்விக்கழகப் பொறுப்பாளர் கி.தாயகன் கூறினார்.

மருதங்கேணி இந்துதமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்ற மாவீரர் கடற்புலி மேஜர் இன்பநிலா ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்ட விளையாட்டு மைதானப் பெயர்ப்பலகை திரை நீக்க விழாவிலும் மைதான திறப்புவிழாவிலும் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு அவர் உரைநிகழ்த்தினார். பாடசாலை அதிபர் பி.நவநீதமணி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தாயகன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இந்திய இராணுவம் எமது நாட்டைவிட்டு முற்றாக வெளியேறியபின் மூன்று மாதங்களே சமாதானக் காற்றைச் சுவாசிக்க முடிந்தது. இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்ததைத் தொடர்ந்து ஆனையிறவு நோக்கி கட்டைக்காட்டில் இராணுவம் தரையிறக்கம் தொடர்ந்து நடைபெற்ற இராணுவ நடவடிக்கை காரணமாக இந்தப் பிரதேசத்து மக்கள் முற்றாக இடம் பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் குடியேறினார்கள்.

மணல் விளையாட்டு மைதானங்களில் பயிற்சிபெற்று மாவட்ட மாகாண மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி எமது பிரதேச மாணவர்கள் - விளையாட்டு வீரர்கள் சாதனை படைத்துள்ளனர்.

கடற்புலி மேஜர் இன்பநிலா ஞாபகார்த்த வித்தியாலய விளையாட்டு மைதானத்தை நான்கு லட்சம் ரூபா செலவில் அவரின் உறவுகள் அமைத்துக் கொடுத்துள்ளனர். இப்படியான மைதானத்தில் மாணவர்களின் விளையாட்டு வீரர் களப்பயிற்சி பெறுவதன் மூலம் வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளிலும் சாதனை படைகக முடியும் - என்றார்.

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை வித்தியாலய விளையாட்டு மைதானப் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்துவைத்தார். மாவீரரின சகோதரர் ஸ்ரீதர்மராசா வித்தியாலய விளையாட்டு மைதானத்தை நாடாவெட்டித் திறந்து வைத்தார். உதைபந்தாட்டப் போட்டி இடம்பெற்றது.

(ப-36)

# சமாதான காலத்தில் தமிழரின் எழுச்சியை நசுக்குவதற்கு அரசு சதித்திட்டம் போடுகிறது

## யாழ்.பிரதேச அரசியல் பொறுப்பாளர் உரை

கொழும்புத்துறை,செப்.12

சமாதான காலத்தை இழுத்தடித்து தமிழ் மக்களின் போராட்டம் மீதான கொதிநிலையை ஆறவைத்து எழுச்சியை மழுங்கடித்து விடலாம என சிங்கள அரசும் பேரினவாதிகளும் நினைக்கின்றார்கள்.

இந்தத் திட்டத்தை நாம் முறியடிக்கவேண்டும். நாம் விடுதலை வேண்டி எந்நேரமும் கொதிநிலையில் தான் இருக்கின்றோம் என்பதை தியாகி திலீபனின் நினைவு தினம் உள்ளிட்ட சகல நிகழ்வுகளிலும் வெளிப்படுத்த வேண்டும்.

தியாகி திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவு தின ஏற்பாட்டுக் கலந்துரையாடல் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர் கூட்டத்தில் கடந்த 9 ஆம் திகதி நடைபெற்றபோது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ்.பிரதேச அரசியல் துறைப் பொறுபபாளர் எஸ்.செழியன் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.பல நோ.கூ. சங்கத் தலைவர் சு.சிறில தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் இதயங்களில் இருந்து தேசியத்தை எவராலும் பிரித்தெடுத்துவிட முடியாது. 12 நாள்கள் நீர்கூட அருந்தாது தியாக வேள்வி காத்து திலீபன் இறந்தது ஏன்? என்பதை சிந்திக்க வேண்டும்.

தேசியத்தின் மீதும் மக்களின் மீதும் கொண்ட பற்றுத்தான் காரணம். எமது தேசத்தின் உயிராகவும் உடலாகவும் தியாகி திலீபன் வாழ்ந்து கொண்டிருக்கிறான்.

இது போன்றதொரு சமாதான சந்தர்ப்பத்தில்தான் தியாகி திலீபன் 5 அம்சக் கோரிக்களை முன்வைத்து உண்ணாநோன்பிருந்தார். இந்தத் தியாக மரணம் தற்போதைய சமாதானக் காலத்திலும் போராட்ட உணர்வுடன் நாம் விழிப்பாக இருக்கவேண்டும் என்பதைச் சுட்டிநிற்கின்றது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் போராளிகளைத் தமது வீடுகளில் மறைத்து வைத்து எம்மக்கள் காப்பாற்றினார்கள். இது தேசிய உணர்வு. இந்த உணர்வை எவராலும் அகற்ற முடியாது.

சமாதான காலத்திலும் எமது போராட்ட உணர்வை எதிரிக்கு எடுத்துக்கூற நாம் அனைவரும் உணர்வெழுச்சியுடன் திலீபன் ஈகத் திருநாள்களை அனுஷ்டிக்க வேண்டும் - என்று தெரிவித்தார்.

இவ்வாறான திலீபன் நினைவு நாள் ஏற்பாட்டுக் கலந்துரையாடல்கள் குடாநாட்டில் பல இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

(4-30)

# தமிழர் வாழ்வுக்காகக் கிளர்ந்தெழுந்துள்ள மாணவர்களுக்கு அனைவரதும் ஆதரவு தேவை

## மனித உரிமைகள் செயலகத் தலைவர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,செப்.12

தமிழினத்தின் வாழ்வுக்காக மாணவர்கள் கிளர்ந்து எழுந்துள்ளார்கள். அவர்களுக்கு அனைத்து தரப்பினரும் ஒன்று திரண்டு ஆதரவை வழங்கவேண்டும்.

- இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத் தலைவர் வண.பிதா எம். கருணாரட்னம் அடிகளார்.

யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியத்தின் தலைமைச் செயலகத் திறப்பு விழா நல்லூரில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு தலைமையுரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்களுடைய கல்வி முதன் முதலாக 1960 ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியிலும் 1970 இன் ஆரம்ப காலத்திலும் வேரறுக்கப்பட்ட பொழுது பாதிக்கப்பட்ட மாணவர்களில் நானும் ஒருவன். தமிழ் இனத்தின் வளர்ச்சிக்கும் இன ஒழிப்புக்கும் அடித்தளமாக அமைந்தவை அரசினால் முன்வைக்கப்பட்ட கல்விக் கொள்கையே. அப்பொழுது இந்த மாணவர்களைப் போல் நாங்களும் விழித்தெழுந்தோம். அன்று தொடங்கிய இந்தக் கல்விப் போராட்டம் இன்று வரைக்கும் தொடர்ந்த வண்ணமுள்ளது.

ஆரம்பக் காலங்களில் நாம் கல்விப் போராட்டங்களை நடத்தியபோது எவ்விதமான அழுத்தங்களும் இருக்கவில்லை. ஆனால், இன்று அவ்வாறான சூழ்நிலைகள் இல்லை. எம்மைச் சூழ்ந்து நிற்கும் இராணுவம் எந்த நேரத்திலும் எதையுமே செய்யலாம் என்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றபோதும், எமது மாணவர்கள் துணிந்து தமது அடிப்படைக் கல்வி உரிமைப் போராட்டத்தை தொடங்கியுள்ளமையையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம். இது ஒட்டுமொத்தமான தமிழ்ச் சமூகத்தின் எழுச்சி என்றுதான் நான் உணர்கின்றேன்.

### அரசின் பாரபட்சம்

மாறிமாறி ஆட்சிக்கு வருகின்ற அரசுகள் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்களுடைய கல்வியில் முற்றுமுழுதாக பாரபட்சம் காட்டி வருகிறது. கல்வியில் பௌதீக வளங்கள், ஆ[illegible] வழிகளிலும் எமது மாணவர் சமூகம் ஒதுக்கப்படுகிறது.

இந்த நிலையை மாற்றி அமைப்பதற்காக எமது மாணவர் சமூகம் விழித்தெழுந்துள்ளது. அவர்களுடைய இந்த எழுச்சிக்குத் தடைக்கல்லாக எவரும் அமையாது அவர்களுடைய முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து நல்வழிப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு கல்வித்துறை சார்ந்த அனைவருக்கும் உண்டு - என்றார்.

### பொறுப்பை உணர்ந்துள்ள இளைஞர்கள்

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் உரையாற்றும்போது தெரிவித்ததாவது:-

அனுபவமும் ஆற்றலும் மிகுந்த எமது முன்னோர்கள் செய்வது என்ன என்று அறியாதிருந்த வேளையில் தமிழ் இளைஞர்கள் தமது பொறுப்பை உணர்ந்து போராடி இன்று தமிழர்கள் தலைநிமிர்ந்து வாழ்வதற்கு வேண்டிய சுயநிர்ணய உரிமைகளைப் பெற்றுத்தர முனைந்து நிற்கின்றார்கள். இந்த சூழ்நிலையில் இந்தத் தமிழ் மாணவர் ஒன்றியக் கட்டடத் திறப்பு விழா நடைபெறுவது மிகவும் பொருத்தமானது. தமிழ் மாணவர்கள்தான் தமிழ் மக்களின் தலைவர்கள். அவர்கள் பாடசாலைகளிலும் சரி பல்கலைக்கழகத்திலும் சரி தமது நியாயமான கோரிக்கைகளை நியாய பூர்வமான போராட்டங்களின் மூலம் வெற்றி பெற்று இன்று ஒரு மதிப்புமிக்க நிலையிலேயே தமிழ் மக்களை வழிநடத்திக் கொண்டிருக்கிறார்கள் - என்று கூறினார்.



இந்த மாணவரின் பிரச்சினைதான் நாட்டினுடைய பிரச்சினை. நாட்டினுடைய பிரச்சினைதான் மாணவரின் பிரச்சினை. நாட்டின் பிரச்சினை தீரப்படாத வரை மாணவரின் பிரச்சினை தீரப்போவதில்லை. ஆகவே, மாணவராகிய நீங்கள் சரியான வழியிலே ஒன்று திரண்டு இந்த நாட்டின் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயலவேண்டும்.

மாவட்டம் தோறும் மாணவர் ஒன்றியம் திறக்கப்படவேண்டும். இவ்வாறு ஒரு ஒன்றியம் வவுனியாவிலும் திறக்க இருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். அங்கும் சமுதாயப் பிரச்சினைகள் காணப்படுகின்றன. எங்கு சென்றாலும் மாணவர்கள் சமுதாயப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டும். அவ்வாறு முகங் கொடுக்கும்போது அதற்கான ஆலோசனைகளை நாம் வழங்குவோம் - என்று அவர் மேலும் பேசுகையில் கூறினார்.

(ப-5-203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 சர்வதேச பல்கலைக்கழகங்களில் நேரடி அனுமதிக்கு கைகொடுக்கும் NIIT



நான் NIIT க்கு நன்றி சொல்கிறேன்.
நான் NIIT இல் DNIIT கற்கையை
பூர்த்திசெய்து B.Sc (Hons)
பட்டப்படிப்பை லண்டன்
South bank பல்கலைக்
கழகத்தில் படித்து முடித்துள்ளேன்
என்பதைப் பெருமையுடன் கூறுகிறேன்
- Mubarak



A Degree From USA, UK, Australia, Canada, Ireland Newzealand

37 நாடுகளில் 3800இருக்கும் மேற்பட்ட எமது கிளைகளில் உள்ள 2.5 மில்லியன் மாணவர்களுடன் நீங்களும் இணையுங்கள்.

அனுமதிகளுக்கு முந்துங்கள்

Just in 1 year

Microsoft's Best Training Partner

NIIT

The World Largest IT Educator

347, Kasthuriyar Road, Jaffna. TP 021 222 7250
www.niit.com

e Technology Software Engineer
2 Years
After A/Ls

(C-37620)


| | | | |
|---|---|---|---|
| | ரா. | | சனி |
| | இராசிச் சக்கரம் | | சந். வெ. |
| | | | செப். புதன் |
| | | கே. | சூரி. ▲ வியா. |

# இந்த வார இராசி பலன்

## 12-09-2004 - 18-09-2004

**மாற்றம் :**

12.09.2004இல் ஆயிலியம் கடகம் இராசியில் சந்திரன் நிற்கும்.
18.09.2004இல் செவ்வாய் கன்னி இராசிக்கு மாறும்.

அரசியல்வாதிகளாலும் அரசாலும் அரசியலில் திட்டமிட்ட செயற்பாடுகள் ஏற்பட இடமுண்டு. உலக நாடுகளுக்குப் பதில் சொல்ல முடியாதநிலை அரசுக்குத் தோன்றும். இந்தியாவின் வடக்கில் வன்செயல்கள் அதிகரிக்கும். இந்தியாவுக்கும் - பாகிஸ்தானுக்குமிடையில் பேச்சுக்கள் நடக்கும். மத்திய கிழக்கில் ஈராக், இஸ்ரேலில் பதட்ட நிலை தோன்றும். அரேபிய, இந்து சமுத்திரத்தில் காற்றழுத்தத்தால் மழை வீழ்ச்சி, காற்று வீசுதல் அதிகரிக்க இடமுண்டு எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

### மேடம்

உங்கள் தொழிலுக்கு சவால்கள் ஏற்படும். உண்மைக்காகப் போராடுவீர்கள். பண வரவு, செலவு அதிகரிப்பு, திட்டமிட்டுச் செயற்படுவீர்கள். கொண்டாட்டங்கள், குடும்ப அங்கத்தவர்களுக்கு நன்மைகள் ஏற்படும். தூரப்பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். வயிற்று நோ, தோல் வருத்தம், காயங்கள் வரலாம். வியாபாரிகள், ஆசிரியர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் - புதன்.*

### இடபம்

திட்டமிட்டு எதைச் செய்தாலும் ஏமாற்றந்தான் என அடிக்கடி எண்ணுவீர்கள். தொழில் ஸ்தானத்தில் எதிர்ப்புணர்வு மிகைப்படும். பொருள் விரயமாகும். உதயாதிபதி வெள்ளி முயற்சி ஸ்தானத்திலிருப்பதனால் புதிய திட்டம் ஏற்பட்டு வருங்காலத்தில் நன்மைகள் கொடுக்கும். பிரயாணங்களைத் திட்டமிடுவீர்கள். களவுபோக இடம் உண்டு. வாய்வுத் தொல்லை, கால் உளைவு கொடுக்கும், ரி.வி., சங்கீதத் துறையினர்கள், சந்தை வியாபாரிகள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள் - புதன்.*

### மிதுனம்

மந்தப்புத்தி, தொழில் ஸ்தானத்தில் நன்மைகள் ஏற்படும். பிரயாணம் தடைப்படும். பழைய பாக்கிகள் வசூலாகும். மேலதிகாரிகள் உதவி செய்வார்கள். குடும்பத்தவர்களுக்கு நன்மைகள் கிடைக்கும். வாய்வுத்தொல்லைகள், அடிக்கடி வயிற்று வருத்தம், மாமன் வழியிலிருந்து உதவிகள் என்பன கிடைக்கும். ஆசிரியர்கள், தொழிலநுட்பத்தொழில், கம்பியூட்டர் தொழில் செய்பவர்கள், அச்சுத் தொழில் செய்பவர்கள் ஆகியோர் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்: புதன்.*

### கடகம்

இவ்வாரம் கலகலப்பான காலமாகும். இடமாற்றங்கள் கொடுக்கும். பணவரவு அதிகரிக்கும். எதிர்ப்பாலார்கள் உதவிகள் செய்வார்கள். குடும்பத்தில் பிரச்சினை, கௌரவக் குறைவான சம்பவங்கள் இடம்பெற இடம் உண்டு. வேலைப்பளு அதிகரித்துக் களைப்பு ஏற்படும். வாகனச் செலவுகள் அதிகரிக்கும். இடமாற்றங்கள், பிரயாணங்களைத் தவிர்க்கவும். அரசியல்வாதிகள், சட்டத்துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

### சிங்கம்

திட்டமிட்டது பாதியில் நிற்கும். அடிக்கடி கோபம் வரும். புதிய நண்பர்கள் உதவுவார்கள். தொழில்ஸ்தானத்தில் வீண் பகை, வீட்டுச் செலவு அதிகரித்தல், பழைய பாக்கி வசூலாகலாம். சகோதரருக்குப் பிரச்சினை வர இடமுண்டு. பிரயாணங்கள் தடைப்படலாம். கால் விறைப்பு, மனப்பயம், பொருள் இழப்பு என்பனவும், கடற்றொழில், இரும்பு வியாபாரிகள், நீர்வாகிகளுக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

### கன்னி

மனப் பதட்டம், புதிய திட்டங்களால் நன்மைகள் கொடுக்கும். தொழில்ஸ்தானத்தில் மந்தநிலை ஏற்படும். பெரியவர்களின் உதவிகளும் ஆசீர்வாதங்களும் திட்டமிட்டுச் செயற்படாதா என்ற பயமும் தோன்றும். பெற்றோர் வழிச் சகோதரங்களுக்கு நன்மைகள் ஏற்படும். கால் நோ, சளி, வாய்வுத்தொல்லைகள் கொடுக்கும். ஆசிரியர்கள், அரசியல்வாதிகள், சந்தை வியாபாரிகள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

### துலாம்

புதிய அனுகூலங்கள் ஏற்படும். பணவரவு கொடுக்கும். செயற்பாடுகளால் நன்மை, பெரியவர்கள் உதவிகள் கிடைக்கும். சகோதரங்களின் உதவிகள் கிடைக்கும். இடமாற்றங்கள் சகஜம். புதிய கல்வி தொடர யோசனைகள் ஏற்படும். அரச அதிகாரிகளின் உதவிகள் கிடைக்கும். கால் பிடிப்பு, முதுகு, நாரி நோ கொடுக்கும். ஆசிரியர்கள், தரகுத் தொழில் செய்பவர்கள், வியாபாரிகள் நன்மைகள் அடைவார்கள். *அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

### விருச்சிகம்

ஆலய தரிசனம், வரவேற்பு, திட்டமிட்டுச் செயற்படுதல், அடிக்கடி இடமாற்றங்கள், பெரியவர்கள் நன்மை செய்தல் என்பன நடக்கும். கிருமித் தாககம், மூக்கு, தொண்டை, வரட்சி; கை, கால் நரம்புச் சோர்வு, பித்த மயக்கம் என்பன வரலாம். பொருள் இழப்பு, களவு போகலாம். நிதானமாக இருக்கவும். இரும்பு, சாய்ப்புச் சாமான்கள், பலசரக்கு வியாபாரிகள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: புதன், வியாழன், சனி.*

### தனுசு

தொழில் சிறப்பு, புதிய திட்டங்கள், பண வரவு, பெரியவர்களின் உதவிகள் கிடைக்கும். கெட்ட நண்பர்களின் ஆலோசனைகளால் நஷ்டங்கள் வரும். பிறநாட்டுச் செய்திகள் மனநிறைவைக் கொடுக்கும். புத்திரருக்குச் சிறப்பு வரும். காலில் நோ கொடுக்கும். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். குருத்துறை, வியாபாரத்துறை, மருநது வியாபாரிகள் அதிக வருமானத்தை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன், சனி.*

### மகரம்

புதிய திட்டங்களால் வெற்றி கிடைக்கும். மேலதிகாரிகள் உதவி தருவர். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் கொடுக்கும். இடமாற்றங்களால் நன்மை வரும். பொதுத்தொண்டு, வாகனச் செலவுகள், வெளிநாட்டுத் தொடர்பு, புகழ் என்பனவும் கொடுக்கும். பழைய பாக்கியொன்று வசூலாகும். முதுகு நோ, கால் உளைவு, வாய்வு கொடுக்கும். கடற்றொழில், சந்தை வியாபாரிகள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி.*

### கும்பம்

அடிக்கடி கோபம். திட்டமிட்டபடி நடக்காது. வருவாய்க்கு மீறிய செலவுகள் இருக்கும். அடிக்கடி மனப்பயம், பித்தக் கொதிப்பு, கால் உளைவு, பிரயாணங்கள் தடைப்படலாம். அந்நியர் உதவி, ஆலய தரிசனம், அடிக்கடி பொருளால் யோசனை என்பன கொடுக்கும். ஆசிரியத் துறை, பிரயாணத்துறை, தொழில்நுட்பத்துறைகளைச் சார்ந்தவர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்டநாள்கள்: வியாழன், சனி.*

### மீனம்

தொழில் சிறப்பு, மேலதிகாரிகள் உதவுவார்கள். குடும்பத்தில் கலகலப்பு, பிடிவாதத்தனம், அதிகாரிகளின் உதவிகள் கிடைத்தல், பழைய பாக்கிகள் வசூலாகும். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். இடுப்பு நோ, சளித்தன்மை, குடல் வருத்தங்கள் என்பன வருத்துதல். வியாபாரிகள், மருந்து, தொழில்நுட்பக் கருவிப் பாவனையாளர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: வியாழன், சனி.*

மகாதேவா ஜோதிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர் மீதான கடற்படையின் தாக்குதல்கள் தொடர்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குக!

## கண்காணிப்புக்குழுத் தலைவருக்குக் கடற்றொழிலாளர் சமாசம் கடிதம்

புதுக்குடியிருப்பு,செப்.12

மீனவர்கள் மீது கடற்படையினர் மேற்கொள்ளும் தாக்குதல்களும் கெடுபிடிகளும் இனியும் தொடராமல் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அண்மையில் முல்லைத்தீவுக் கடலில் வைத்து கடற்படையினர் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பாக மீனவர் சமாசம் கண்காணிப்புக் குழுத்தலைவர் ரொன்ட் புரூ ஹொவ்டேயிற்கு முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தது.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அல்வாய் பகுதியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவரும் தற்போது இடம்பெயர்ந்து மாத்தளைப் பகுதியில் வசித்து தொழில்புரிந்து வரும் அந்தோனிப்பிள்ளை டானியல் என்பவருடைய 32 அடி நீளம் கொண்ட வள்ளத்தில் வளிச்சல் தொழிலுக்காக மு.தவராசா, ஆ.அருள், டா.தேவகுமார், அ.டேவிசன் ஆகிய தொழிலாளிகள் 2004.09.01ஆம் திகதி மாலை 3மணிக்கு தொழிலுக்குச் சென்றுள்ளார்கள்.

தொழிலுக்குச் சென்றுகொண்டிருக்கையில் 15 கடல் மைல் தூரத்தில் மாலை 5மணிக்கு மாத்தளனுக்கு நேரே நின்ற ஸ்ரீலங்கா கடற்படைக்குச் சொந்தமான டோறாப் படகில் வளத்தை நோக்கித் துப்பாக்கியால் சுட்டபோது தொழிலாளிகள் கையை உயர்த்தி கத்திய போது குதிக்கும்படி கூறிவிட்டு தொடர்ந்து சுட்டுள்ளார்கள்.

இதனால், வள்ளத்திற்குப் பாரிய சேதங்கள் ஏற்பட்டு மூழ்கும் நிலையிலும் கடற்படையால் கடையார் பக்கம் இடித்து சேதமாக்கப்பட்டது. அதன் பின்னர் தொழிலாளிகளை வள்ளத்தில் ஏற்றித் திரும்ப உயரத் தொழிலுக்குச் செல்லும்படி வெருட்டி விட்டுச் சென்றுள்ளார்கள். அதன பின்னர் தொழிலாளிகள் நீரை வெளியேற்றிக் கொண்டே இரவு 10 மணிக்குக் கரைசேர்ந்துள்ளார்கள்.

இச்சம்பவத்தைத் தங்களின் கவனததிற்கு தயவான அறியத்தருவதுடன் இந்நடவடிக்கையானது தற்போது நிலவிவரும் யுத்தநிறுத்தத்தை மீறும் ஒரு செயற்பாடாகவே நாம் கருதுகின்றோம்.

20 வருடத்திற்கு மேல் நடைபெற்ற யுத்தத்தில் இழக்கப்பட்ட சொத்துக்களை ஈடுசெய்யும் நோக்கோடு தொழில் உபகரணங்களை அபிவிருத்தி செய்துவருகின்ற இந்தவேளையில, ஸ்ரீலங்கா கடற்படையினால் எமது மக்கள மீது கட்டவிழ்த்துவரும் காட்டுமிராண்டித்தனமான இச் செயற்பாட்டிற்கு எமது நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வுபெற்றுக்கொடுக்கும் நோக்கோடு 3ஆம் தரப்பினராக வந்திருக்கும் கண்காணிப்புக் குழுவின் தலைவராகிய தாங்கள் ஒரு முடிவைப பெற்றுத்தருவதுடன் இவ்வாறான சம்பவங்கள் இனிவரும் காலத்தில் நடைபெறாதவண்ணம் பார்த்துக்கொள்ளுமாறு எமது மீனவ மக்களின சார்பாகக் கேட்டுக்கொள்கின்றோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-353)

# இளைஞர் மன்ற ஏற்பாட்டில் விளையாட்டுப் பயிற்சி முகாம்

ஒட்டுசுட்டான்,செப்.12

தேசிய இளைஞர் மன்றத்தினரால் எதிர்வரும் 6 ஆம், 17 ஆம் திகதிகளில் முல்லை மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கான விளையாட்டுப் பயிற்சி முகாம் ஒன்று நடத்தப்படவுள்ளதாக இளைஞர் மன்றச் செயலாளர் செ.சிவயோகநாதன் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் மன்றப் பணிப்பாளர் நாயகம் தலைமையில் நடைபெறும் இந்தப் பயிற்சி முகாமில் முல்லை மாவட்ட இளைஞர், யுவதிகள் கலந்துகொண்டு பயிற்சியினை பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளதும் இவர்களுக்கான தங்குமிட மற்றும் உணவு வசதிகளும் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும தெரிவித்தார். (4-341)

# கிளிநொச்சி ம.வியில் கணனிப் பிரிவு ஆரம்ப விழா

வட்டக்கச்சி,செப்.12

கிளிநொச்சி, கண்டாவளை மகா வித்தியாலத்தில் கணனிப்பிரிவு ஆரம்பவிழா இன்று காலை 9மணிக்கு பாடசாலை அதிபர் சி.சிறீதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி வலயக் கல்விப பணிப்பாளர் ப.அரியரத்தினம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இக்கணனிப் பிரிவானது வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் பாடசாலையின் பழைய மாணவர்களினதும் நலன்விரும்பிகளதும் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (4-405)

# பொருண்மியத்தின் ஏற்பாட்டில் மாடுகளுக்குத் தடுப்பூசி

பரந்தன்,செப்.12

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அண்மைக்காலமாக வன்னிப் பகுதியில் மாடுகளுக்கு கால்வாய் நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்களுக்கான தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்நடவடிக்கையின் ஒரு கட்டமாகக் கடந்த மாதம் விசுவமடு மயில்வாகனபுரம் கிராமத்தில் சுமார் 200 மாடுகளுக்குத் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

ஏனைய கிராமங்களிலுள்ள மாடுகளுக்கும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்துடன் கண்டாவளைப் பிரதேச செயலரும், கிளிநொச்சி மாவட்ட கால்நடை அபிவிருத்தி சுகாதார வைத்தியர்களும் இணைந்து இந்நடவடிக்கையை மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (4-352-404)

# கிளிநொச்சியில் கணனி மூலமான கணக்கியல் கற்கைநெறி

வட்டக்கச்சி,செப்.12

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கியல் கற்கைநெறியொன்றினை இலங்கை செஞ்சிலுவைச் சங்க கிளிநொச்சி மாவட்டக்கிளை ஆரம்பிக்கவுள்ளது.

கற்கை நெறியினைத் தொடரவிரும்புவோர் செஞ்சிலுவைச்சங்க கிளிநொச்சி மாவட்டக் கிளையினருடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (4-405)

# நாகபடுவான் மக்களுக்கு போரூட் நிறுவனம் உதவி

பூநகரி,செப்.12

கரியாலை நாகபடுவான் மக்கள் அபிவிருத்தி நிறுவனம் போரூட் நிறுவன நிதி உதவியுடன் கரியாலை நாகபடுவான் மக்களுக்கு பல உதவித் திட்டங்களைச்செய்துள்ளது.

அந்தவகையில், 15 பேருக்கு மீள வேய்தலுக்கான ஓலைகளையும், 6 பேருக்கு கடற்றொழில் உபகரணங்களையும், 5 பேருக்கு கோழிவளர்ப்பிற்கும், 3 பேருக்கு பசுவளர்ப்பிற்கும், 3 பேருக்கு ஆடு வளர்ப்பிற்கும், சிறுவியாபாரத்திற்கு ஒருவருக்கும், கடனுதவியை வழங்கியுள்ளது.

இத்துடன் புதிதாக ஒரு கிணறு அமைத்துக் கொடுத்துள்ளதுடன் ஒரு கிணற்றைப் புனரமைத்துக்கொடுத்துள்ளது. (4-403)




# புதுமுக மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல்

வட்டக்கச்சி,செப்.12

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இந்த வருடம் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவுசெயயப்பட்டுள்ள மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி திருநகரில் உள்ள கிளிநொச்சி மாவட்டப் புதுமுக மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் புதுமுக மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (4-405)

# ஒட்டுசுட்டான் கோட்ட முன்பள்ளிகளின் கண்காட்சி

ஒட்டுசுட்டான்,செப்.12

தமிழர் புனர்வாழ்வுக்கழக அனுசரணையுடனும் முல்லைக்கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடனும் முல்லை அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தால் நடத்தப்பட்ட முன்பள்ளிச் சிறார்களின் கண்காட்சி கடந்த 2ஆம் திகதி ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

முன்பள்ளிக் கல்விப்பணிப்பாளர் செல்வி கு.கிருபரஞ்சினி தலைமையில் ஆரம்பமான நிகழ்வில், மங்கள விளக்கினை துணுக்காய் வலயக கல்விப்பணிப்பாளர் மா.தேவேந்திரா, உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.ஜெயம்சபாபதி, முல்லை கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பொறுப்பாளர் ஈழவன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினைத் துணுக்காய் வலய கல்விப்பணிப்பாளர் மா.தேவேந்திரம் ஏற்றிவைத்தார்.

கண்காட்சி மண்டபத்தினை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய அதிபர் பங்கையற்செல்வன் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். நிகழ்வில் கனிஸ்ரா,பழம்பாசி, பாரதி சமளங்குளம், பேராதுமாலதி, கணேசபுரம் வசுமதி, தட்டையர் மலை மாவீர், கனகஇரத்தினபுரம் கிருபன், சின்னசாளம்பன் அன்பழகன், சிலையடி பரந்தாமன், பண்டாரவன்னியன், முத்துவிநாயகபுரம் I, முத்துவிநாயகபுரம் II, முத்தையன் கட்டு அருணா, 3ஆம் கண்டம் தசன், கூழாமுறிப்பு பாரதி, ஜீவநகர் மருது, கருவேலன் கண்டல் அகஸ்ரின், ஒட்டுசுட்டான் நாவலர் ஆகிய முன்பள்ளிகள் கலந்துகொண்டன. ஏராளமான மக்கள் கண்காட்சியினைப் பார்வையிட்டனர். (4-341)

# மணியங்குளம் வீட்டுத் திட்ட அடிக்கல் நடப்பட்டது

ஸ்கந்தபுரம்,செப்.12

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் உதவியுடன் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் "மணியங்குளம் வீடமைப்புத திட்டத்திற்கான" அடிக்கல் நாட்டும்நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் மங்களவிளக்கினை அக்கராயன் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் கரிகாலன், அக்கராயன் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் சுதர்சன், கட்டட ஒப்பந்தகாரர் சுபசிங்க ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

நிகழ்வில் அடிக்கல்லினை கிராம சேவையாளர் கே.மகேந்திரன் நாட்டிவைத்தார். தொடர்ந்து ஏனைய பிரதிநிதிகளும் அடிக்கல்லினை நாட்டினார்கள். அடுத்து தமிழர் புனர்வாழ்வுக்கழக உதவிப் பணிப்பாளர் கே.நல்லையா அவர்கள் உரையாற்றினார்.

கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம், (NEDRO) நெப்றோ இணைப்பாளர்,பொதுமக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இவ்வீட்டுத் திட்டத்திற்கான பொதுக்கிணறுகள், பொதுமண்டபம் என்பன ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ளன. இக்குடியிருப்பிற்கான பாலர் பாடசாலை ஒன்றும் அமைக்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது. (4-381)

# முதலுதவிப் படைப்பிரிவின் சமூக நலப் பயிற்சித் திட்டம்

ஏ.எஸ்.பி.நிறுவனத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சி மாவட்டக் கல்வித்திணைக்களம், சுகாதாரத்திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து கிளிநொச்சி மாவட்ட சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் (முதலுதவி) படைப்பிரிவினர் சமூக நலப்பயிற்சித் திட்டத்தினை நடத்திவருகின்றனர்.

இந்தப் பயிற்சித் திட்டத்தின் கீழ் கடந்த 4ஆம், 5ஆம் திகதிகளில் பரந்தன் வலயப் பாடசாலைகளுக்கான சமூக நலப்பயிற்சிகள் கிளிநொச்சி முருகானந்தா மகாவித்தியாலயம், பரந்தன் இந்து மகாவித்தியாலயம் ஆகியவற்றில் நடைபெற்றன.

இப்பயிற்சி நெறியில் ஒவ்வொரு பாடசாலைகளிலும் 50இற்கு மேற்பட்ட மாணவர்களும், பாடசாலை ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதில் முதலுதவி, உடல் அமைப்பும் தொழிற்பாடும், முதலுதவிச் செய்முறைகள், தொற்று நோய்கள், சுகாதார நடைமுறைகள் என்பன தொடர்பாக பல விரிவுரைகள் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவு ஆணையாளர், திட்ட இணைப்பாளர், தலைவர், தொண்டர்கள் ஆகியோராலும் சுகாதாரத் திணைக்களப் பிரதிநிதிகளாலும் வழங்கப்பட்டன.

முதலுதவி தொடர்பான கைந்நூல் ஒன்று சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரிவினரால தயாரிக்கப்பட்டு பயிற்சியில் பங்குபற்றிய ஒவ்வொரு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களுக்கும வழங்கப்பட்டது.

பயிற்சியை நிறைவுசெய்த ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் முதலுதவிப்பெட்டிகளும் அதற்கான மருந்துகள், உபகரணங்களும் வழங்கப்பட்டதோடு, ஒவ்வொரு பாடசாலையிலும பயிற்சி நெறியை நிறைவுசெய்த மாணவர்களிடையே பாடசாலை மட்டத்தில் முதலுதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. (4)

# அதிகாரிகளின் திட்டமற்ற செயலினால் மாணவர்கள் பாதிப்பு!

வட்டக்கச்சி,செப்.12

பாடசாலைகளுக்கிடையிலான தேசியமட்ட விளையாட்டுப்போட்டிகளின் முதற்கட்டப் போட்டிகள் கடந்த 4,5,6ஆம் திகதிகளில் கொழும்பில நடைபெற்றன. அதேசமயத்தில் கிளிநொச்சி மாவட்ட ஆங்கிலதினப் போட்டிகள் 4,5 ஆம் திகதிகளில் கிளிநொச்சியில் நடைபெற்றன. இதனால் பல மாணவர்கள் எதில் பங்குபற்றுவது, எதனை விடுவது என்று தெரியாமல் திக்குமுக்காடினர்.

கடந்தமாதம் திட்டமிட்டு அறிவிக்கப்பட்டபடி தேசிய விளையாட்டுப்போட்டிகள் நடைபெறவிருந்த சமயம் கடந்த 2ஆம் திகதி ஆங்கில தினப் போட்டிக்கான அறிவித்தல் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டன.

இந்நிலையில், மாணவர்கள் எதில் கலந்துகொள்வது எனத் தடுமாறிக்கொண்டிருந்ததைக் காணமுடிந்தது. எனினும், பெரும்பாலன மாணவர்கள் தேசிய விளையாட்டுக்களில் பங்குபற்றியதால் கோட்டமட்ட ஆங்கிலதினப் போட்டிகளில் வெற்றியீட்டிய பல மாணவர்கள் மாவட்டப் போட்டியில்பங்குபற்றும் வாய்ப்பை இழந்தனர். வட்டக்கச்சி ம.வி, இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை, முழங்காவில் ம.வி. ஆகிய பாடசாலைகளின் மாணவர்களே இவ்வாறு பாதிப்புக்குள்ளானவர்களாவர்.

சில அதிகாரிகளின் [illegible] பாடுகளால் இவ்வாறு மாணவர்கள் பாதிக்கப்படுவது குறித்துப் பெற்றோர் தரப்பில் கடும் விசனம் தெரிவிக்கப்பட்டது. (4-405)



கண்டாவளைப் பிரிவின் புதிய பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ள சி.சத்தியசீலன் (நடுவில்) கடந்த [illegible] திகதிமுதல் தமது கடமைகளைப் பொறுப்பேற்றார். அன்று நடைபெற்ற சம்பிரதாய பூர்வ நிகழ்வில் புதிய பிரதேச செயலரை முன்னாள் பிரதேச செயலர் சி.சிவசொருபநாதபிள்ளை கைலாகு கொடுத்து வரவேற்பதையும் அருகில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் இ.பற்பநாதன் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: பரந்தன் செய்தியாளர்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

பாவித்த AFT-Davidson Whitin Suiile - Mass (U.S.A) Perfector 702 P ஓவ்செட் மெசின், சைனா கட்டர் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 021 222 2731. (36254)

Great Dane நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சுட்டி பாம், வட்டுக்கோட்டை. (36319)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், சிவன்பண்ணை வீதியில் 2பரப்பு 1குழி காணியுடன் கூடிய வீடும், ஏழாலை மத்தி, பசுபதி கடையடியில் 2 பரப்புக் காணியுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு: கு.குமாரகுலசிங்கம், ஏழாலை வடக்கு, ஏழாலை. T.P.: 077 6125140. (36320)

யாழ்ப்பாணம், அரசடி வீதி, கந்தர்மடத்தில் 2½ பரப்புக் காணியில் 4 அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 115/1, அரசடி வீதி (யூனிவேர்சல் ரியூட்டரி இருந்த ஒழுங்கை), கந்தர் மடம், யாழ்ப்பாணம். (35816)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

Dashhund x Dobermann Pincher அழகான நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ செண்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை முத திரைச்சந்தையடி, நல்லூர். (36266)

அல்சேஷன் பெண் நாய் ஆறுமாதம் நிரம்பியது விற்பனைக்குண்டு. தொடர்பு: மு.பஞ்சலிங்கம் ஊரெழு கிழக்கு, சுன்னாகம். (பிள்ளையார் கோயில் முன் லேன்). (36286)

## காணி விற்பனைக்கு

பெரியகடை, யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதிக்கு அண்மையில், பழைய மீன் சந்தைக்குப் பின்னால் உள்ள நாலு பரப்பு 5.39 குளி, வெற்றுக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சி.சி. நாதன், No.16/3, விதானையார் வீதி, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம்.T.P.0776146434.(36337)

இலக்கம் 65, கச்சேரி நல்லூர் வீதியில் 2¼ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 113, கச்சேரி நல்லூர்வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல.021-222-6240. (36317)

## கோழிக்குஞ்சு விநியோகம்

Prima புறொயிலர் குஞ்சுகளும், சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகளும், 13.09.04 மாலை விநியோகிக்கப்படும். ப்திவுகளை மேற்கொள்ளவும். ராஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, T.P. 3529, ரஞ்சித், 517, ஸ்ரான்லி றோட், தரகை முதலாம் கட்டை, பருத்தித்துறை, P.ரவி, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி, ராதா, மாவடி, வட்டுக்கோட்டை, ஸ்ரீராம், பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக. (36182)

தரமான Prima, Broiler 35/= மற்றும் Prima Layer Brown/White குஞ்சுகள் 50/= 13.09.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் Suddi farm வட்டுக்கோட்டை, நியூ R.S.K Farm, உடுவில், சாவகச்சேரி முருகனிலும் பெற்றுக்கொள்ளலாம். முன் கூட்டியே பதிவுசெய்யவும்.க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.(36057)

தரமான கொழும்பு, பிறிமா (வெள்ளை, சிவப்பு) போவன்ஸ் (வெள்ளை, சிவப்பு) ஒரு நாள் கோழிக்குஞ்சுகள் விநியோகம் செய்யப்படும் தொடர்பு: எஸ் கண்ணன், வல்வெட்டித்துறையில் நெடிய காட்டுப்பிள்ளையார் கோயிலடி, ந.மோகனதாஸ் பெரிய தம்பிரான் கோயிலடி, பொலிகண்டி, வல்வெட்டித்துறை. நெல்லியடியில் ராஜ் ஸ்ரோர்ஸ். (சி-37622)

## மணமகன் தேவை

யாழ்.வடமராட்சி இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1964ஆம் ஆண்டு பிறந்த, விசாகம் நட்சத்திரம், 2ஆம் பாதம், படித்த அழகிய மணப்பெண்ணுக்கு உத்தியோகம், சுயதொழில், வெளிநாட்டு மணமகன் தேவை. ஜாதகம் பொருந்துமிடத்து சீதனம் பற்றி தீர்மானித்துக் கொள்ளலாம். தொடர்பு: விளம்பர இல. 2361 மே/பா உதயன். (35972)

யாழ் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1968இல பிறந்த, அத்தம் நட்சத்திர ஆசிரியைக்கு B.A (Dip.in Ed.) அரசாங்க/அரச கூட்டுத்தாபனத்தில் வேலைசெய்யும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இலக்கம் 2370 C/o உதயன், யாழ்ப்பாணம். (36243)

## தேவை

K.K.S. வீதியில் கொட்டடி தொடக்கம் நாச்சிமார் கோயிலடியை அண்மித்த பகுதியில் வீடு வாடகைக்குத் தேவை. முற்பணமும் மாதாந்த வாடகையாக 3000/-வும் கொடுக்கப்படும் விளம்பர இல. 2375. C/o உதயன் யாழ்ப்பாணம்.(36327)

30 வருட அனுபவமுள்ள M.Sc. (Crop Science) விவசாயப் பட்டதாரிக்குப் பொருத்தமான வேலை தேவை. தொடர்பு: விளம்பர இல. 2371, உதயன், யாழ்ப்பாணம். (36260)


**ஆங்கில மீட்டல் வகுப்புகள்**

2004 டிசெம்பர் O/L பரீட்சைக்குரிய ஆங்கில Revision and paper Class ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியரினால் நடத்தப்படும். ViSit Respectable homes.

33, பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி (தெற்கு) யாழ்ப்பாணம்.


## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதுடைய பயிற்றப்பட்ட ஆசிரியருக்கு தகுந்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். மணமகன் ரோகினி நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்றவர் - கிரக பாவம் 06 உடையவர். தொடர்பு: விளம்பர இல.2372 மே/பா உதயன், யாழ்ப்பாணம். (36297)

இந்து கௌரவ 1970 Dental Surgeon கிரகபாவம் 35 மணமகனுக்கு கனடா, லண்டன், ஆஸ்திரேலியா நாடுகளுக்கு Sponcer பண்ணக் கூடிய செவ்வாய்த்தோஷமற்ற அழகான Doctor மணப்பெண் மட்டும் தேவை. தொடர்பு: 0776140273. (36293)

வடமராட்சி இந்து, 75ஆம் ஆண்டு, சுவாதி, 5'10" உயரம் எலக்ரிக்கல் எலக்ரோனிக் பொறியியலாளருக்கு மணமகள் தேவை. தொடர்பு: 62, இராசவீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். T.P. 021 222 3812. (36322)

U.S.A யில் வசிக்கும் யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1974ஆம் ஆண்டு, உத்தரட்டாதி நட்சத்திரம் 4இல் செவ்வாய் 11.25 பாவம் Civil Engineering படித்து Engineer ஆகத் தொழில்புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: Sri Luxmie Marriage Service 289, 2/1, Galle Rd., Col - 06 T.P 4527432. (C/37585)

AACS, CCNA ஆகிய தகைமைகள் பெற்று கொழும்பில் System Engineer ஆகப் பணி புரியும் பருத்தித்துறை, இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயது மணமகனுக்கு மணமகள் தேவை. கணனித்துறையில் பணிபுரிபவர் அல்லது விஞ்ஞான பட்டதாரி ஆசிரியை விரும்பத்தக்கது. (வடமராட்சியைச் சேர்ந்தவராயின் நன்று) SLMS T.P 4527432. (C/37585)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1975ஆம் ஆண்டு 5'10" அனுஷம் நட்சத்திரம் 14.5பாவம் B.Sc. படித்து I.T Project Manager ஆகத் தொழில் புரியும் மணமக னுக்கு Graduate மணமகள் தேவை. தொடர்பு: Sri Luxmie Marriage Service 289, 2/1, Galle Rd., Col. - 06 T.P 4527432. (C/37585)

SWISS இல் வசிக்கும் யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1971ஆம் ஆண்டு 5'6" கார்த்திகை நட்சத்திரம் லக்கினத்தில் செவ்வாய், 7இல் சனி 31.75 பாவம் A/L படித்து Supervisor in swiss Airport இல் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: Sri Luxmie Marriage Service 289, 2/1, Galle Rd., Col. - 06 T.P 4527432. (C/37585)

சிங்கப்பூரில் வசிக்கும் யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1971ஆம் ஆண்டு 5'6" மிருகசீரிடம் நட்சத்திரம் 4இல் செவ்வாய் 7இல சனி 35.5 பாவம் Civil Engineering, M.Sc (Hons) படித்து Engineer ஆகத் தொழில் புரியும் மணமகனுக்கு Engineer or Accountant ஆகத் தொழில் புரியும் மணமகள் தேவை. தொடர்பு SLMS T.P. 4527432 (C/37585)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1969ஆம் ஆண்டு, பரணி 3ஆம் பாதம் ஜேர்மனி P.R. கிடைத்த மணமகனுக்கு படித்த அழகிய மணமகள் தேவை. மணமகன் தற்போது யாழ்ப்பாணம் வந்துள்ளார். ஜாதகத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 2373 மே/பா உதயன். (36305)

U.K இல் வசிக்கும் யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1972ஆம் ஆண்டு மகம் நட்சத்திரம் 4இல் சூரியன் செவ்வாயுள்ள 19.5 பாவம் A/L படித்து Business செய்யும் மணமகனுக்கு மணமகள் தேவை. தொடர்பு: Sri Luxmie Marriage Service 289, 2/1, Galle Rd., Col. - 06 T.P 4527432. (C/37585)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1975ஆம் ஆண்டு 5'5" அவிட்டம் நட்சத்திரம், 7இல் சனி 49.0 பாவமுள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.தொடர்பு: Sri Luxmie Marriage Service 289, 2/1, Galle Rd., Col. - 06 T.P 4527432. (C/37585)

## மணப்பெண்கள் தேவை

1975, கிரகபாவம் 50, சைவ போசன காப்புறுதி ஸ்தாபன உத்தியோகத்தருக்கும், 1977 CTB நடத்துநருக்கும் அழகான அரசதொழில் புரியும் செவ்வாய்த்தோஷமற்ற இந்து கௌரவ குடும்பத்து மணப்பெண்கள் தேவை. தொடர்பு: 077 6140273. (36294)

## தவறிவிட்டது

இல.54 விநாயகர் வீதி, நல்லூர் வடக்கைச் சேர்ந்த குஞ்சிதபாதம் சுரேஸ்குமார் என்பவரின் தேசிய அடையாள அட்டை, மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம், ஆசிரிய அடையாள அட்டை என்பன 07-09-2004 செவ்வாய்க்கிழமை நல்லைக் கந்தன் பின்வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியிலோ அல்லது T.P 021 4590184 இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (36301)


**சிறுகுறிஞ்சாப் பவுடர்**

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக்குண்டு. இது நீரிழிவு கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம்.

BIO TEC INTERNATIONAL

இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.:021-



**விற்பனைக்குண்டு**

புதிய காது கேட்கும் கருவி (Hearing Aid Danavox) -Pocket Model.
விலை 8000/= தேவைப்படுவோர்
தொடர்பு: தி.கதிரவேற்பிள்ளை, தம்பாவத்தை, தம்பசெட்டி, பருத்தித்துறை. (36295)

**விற்பனைக்கு**

ஜப்பான் T.V., Sony 2093, புல்லுவெட்டும் மெசின், Water cooling fan, VCD/CD Player, Latest - Video Deck SD 225 என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு: (36300)
100, K.K.S வீதி, சுன்னாகம்.

**இணைய, இணையத்தள சேவை**

.com .net .org .info
Doman Registration Rs.400/= per Year
Hosting upto Rs.2000/= per year
Limited time offer
SAAMSTECH, 841, Hospital Road, Jaffna.
T.P.: 0773 068968 (சி-37510)

**SAAMSTECH இன் ஆங்கில, சிங்கள நேரடி வகுப்பு**

காலம்: 2 மாதங்கள்
கட்டணம்: ஆங்கிலம் ரூபா 6000, சிங்களம் ரூ.4000/= முழுமையாக கதைக்கலாம்.
SAAMSTECH
841, Hospital Rd, Jaffna
Phone: 0773068968
(சி-37511)

சிறந்த முறையில்
றபர் சீல்கள்
உயர் ரக
பொலிமர் சீல்கள்
விரைவாக செய்து கொள்வதற்கு
மருதா
றபர், பொலிமர் சீல் தொழிற்சாலை.
495, கே.கே.எஸ். வீதி யாழ்ப்பாணம்
(36242)

**இணையத் தளம் ஊடாக**
**24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது**

WORLD TAMILAR
உலகத் தமிழர் வானொலி

இணைய முகவரி: WWW.Wtrfm.com
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க
நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
26 உற்சவ நாள்களிலும்
(ஒகஸ்ப் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம் மூலம் செவிமடுத்து மகிழலாம்).
உலகத் தமிழர் வானொலியுடன்
நேரடியாக இணைய
MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969
(சி-36863)

உலகத் தமிழர் உறவுப் பாலமாக
உலகத் தமிழர் வானொலி
ஊடக அனுசரணை:- 'உதயன்'


## வட்டு. வைத்தியசாலையில் சனிக்கிழமைகளிலும் பற்சிகிச்சை

வலிதென்மேற்கு-செப்.12

வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்திய சாலையின் பற்சிகிச்சைப்பிரிவில் இம்மாதம் முதல் சனிக்கிழமைகளிலும் பற்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுவரை காலமும் புதன்கிழமைகளில் மட்டும் இங்கு பற்சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இதனை வாரத்தில் இரு தினங்களாக அதிகரிப்புச் செய்து தருமாறு இப்பகுதி மக்கள் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றை யாழ் சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளருக்கு அண்மையில் அனுப்பி வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ-135)

## கூட்டுறவுக் கிராமிய வங்கி சங்கானையில் திறப்புவிழா

சங்கானை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் நலன்கருதி கூட்டுறவுக் கிராமிய வங்கி ஒன்றை திறக்கவுள்ளது.

இதன் திறப்புவிழா எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு சங்கத்தலைவர் வ.முத்துராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில், பிரதம அதிதிகளாக யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் (பனை தென்னை வளம்) சி.ஐயாத்துரை, முன்னாள் யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் (பனை தென்னை வளம்) சு.கணேசமூர்த்தி, வலி. மேற்கு (சங்கானை) பிரதேச செயலர் சி.ஏ.மேகன்ராஸ் ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக சங்கானை மக்கள் வங்கி முகாமையாளர் பொ.அச்சுதம்பிள்ளை, தமிழீழ நிர்வாகசேவை, கூட்டுறவுத்துறை (பனை தென்னைவளம்) பொறுப்பாளர் க.இலங்கன், வலி.மேற்குஅரசியல்துறைப் பொறுப்பாளர் அ.அன்பு ஆகியோர் கலந்துகொள்வர்.

(எ-135-29)

## வலி.மேற்கில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு விரைவில் உதவுதொகை

வலி.தென்மேற்கு,செப்.12

வலிகாமம் மேற்கு பிரதேசசபைப் பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களுக்கு இவ்வருடத்திற்கான அரச உதவி நன்கொடைக் கொடுப்பனவு விரைவில் வழங்கப்படவுள்ளது.


இப்பிரிவிலுள்ள சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் இக்கொடுப்பனவைப் பெறுவதற்கு உரிய ஆவணங்களுடன் சுழிபுரத்திலுள்ள பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச சபையின் செயலாளர் திருமதி பு.சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இப்பிரிவு சனசமூக நிலையங்களின் செயற் பாடுகளை ஊக்குவிக்குமுகமாக அனைத்து நிலையங்களின் நிர்வாகிகளுக்குமான கலந்துரையாடல் கூட்டம் ஒன்றை விரைவில் நடத்த விருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-135)

## நெஞ்சகலாத 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

**ஐயன் மயில்வாகனம்**



மலர்வு 24.08.1943 உதிர்வு 29.09.1993

தந்தையெனும் பாச உருவெடுத்து - எம்மை
நேசம் காட்டி வளர்த்து
விந்தை உலகில் விற்பனராய் திகழ
மேதினியில் உழைத்தவரே அப்பா! -எங்கள்
சிந்தையிலே உங்கள் எண்ணம்
சிறிதும் சிதையவில்லை
ஆண்டுகள் பல வந்து வந்து போனாலும்
நெஞ்சை விட்டு அகலாது உங்கள் உருவம்.

மயில் டிஜிற்றல் போட்டோ,
[illegible] வீதி,
கோண்டாவில் வடக்கு.
T.P-021-4590730

குடும்பத்தினர்.

(36328)(39-21-16-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாகம்ஸ்** சுன்னாகம்

தனுஷ், சிந்துதுலானி, கருணாஸ், மணிவண்ணன், நடிப்பில்

**சுள்ளான்**



(சி-36415) காட்சிநேரம்: 11.00,3.00, 7.00 (புதிய நேரம்)



**பட்டயக்கணக்காளர் ஆவதற்கான தொழிற்பயிற்சி**

கா.பொ.த.உ. தரத்தில் கணிதபாட திறமைச்சித்தியுடையவர்கள் விண்ணப்பிக்கவும். தங்குமிடம், உணவு, படி (Allowance) வழங்கப்படும்.

தொடர்பு : எம்.இராஜநாயம் அன் கம்பனி பட்டயக்கணக்காளர்கள், 140, பலாலி வீதி (பெற்றோல் செற் முன்பாக), திருநெல்வேலி. T.P.No. : 222 2478

(36338)(38-12-18)


## வரவேற்பு உபசாரம்

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவில் திருமணம் நிறைவெய்திய நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோயில் அர்ச்சகர்

**சிரஞ்சீவி ஆ.சௌந்தரராஜசர்மா**
**சௌ.பானுரேகா**
தம்பதிகளின்
வதூவர கிரகப்பிரவேசம்
(வரவேற்பு உபசாரம்)

13.09.2004 திங்கட்கிழமை தர்மசாஸ்தா குருகுலத்தில் நடைபெறும். நண்பர்கள் அனைவரும் இவ்வழைப்பை ஏற்று வருகைதந்து புதுமணத் தம்பதியினரை ஆசீர்வதித்தேகுமாறு வேண்டப்படுகின்றனர். இங்ஙனம் : சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் தம்பதியினர் - இணுவில்.

(36345)(38-12-18)


**ராஜா** யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடித்த **மதுர**



பு.நே.: 10.30, 2.30, 6.30, 9.30 ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.



**லக்சுமி** இணுவில்

தனுஸ், சாயாசிங், கருணாஸ் மற்றும் பலர் நடிப்பில்

**திருடா திருடி** (சிலம்)



காட்சிநேரம் : 11.00, 3.00, 7.00 (பு.நே) (36223)(12)



**நிரஞ்சனாஸ்** சங்கானை

விஜயகாந்த் (இருவேடம்), குஷ்பு, ரோஜா நடித்த

**வீரம் விளைஞ்ச மண்ணு**



வெள்ளி, சனி, ஞாயிறு. (சிலம்)
CABARET QUEEN இந்தி தமிழாக்கம் (இரவு 8.45பு.நே)
தினசரி 11.00, 2.45, 6.00பு.நே



# அகம்மிக மகிழ்ந்து வாழ்த்தும் திருமண ஓராண்டு நிறைவு



நெதர்லாந்து, லிண்டர்ஸ்பேக்கில் வசிக்கும் **விஜயகிருஷ்ணன் கேதாரகௌரி** தம்பதிகள் இன்று (12.09.04) ஞாயிற்றுக்கிழமை இல்லற பந்தத்தினுள் நுழைந்த ஒரு வருட பூர்த்தியைக் கொண்டாடும் வேளையில் கல்வயல், துர்க்கை அம்மன் அருள்பெற்று தம்பதிகள் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாய் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.

**சி.மாணிக்கம் குடும்பம்,**
குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர்.

**க.கிருஸ்ணமூர்த்தி குடும்பம்,**
தனங்கிளப்பு,
சாவகச்சேரி.

(36336)(38-12-18)


## அநுராதபுரத்தில் ஆயுதங்கள் மீட்பு

அநுராதபுரம் எல்கட்டுவப் பகுதியில் உள்ள கால்வாய் ஒன்றில் இருந்து வெடிபொருள்கள், விமான எதிர்ப்புச் சன்னங்கள், ஆர்.பி.ஜி. குண்டுகள் ஆகியன மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடிபொருள்களும், குண்டுகளும் செயலிழக்கச் செய்யப்பட்டன எனத்தெரிவித்த பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரி விமான எதிர்ப்புச் சன்னங்கள் இரசாயனப் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டிருக்கின்றன எனக் கூறினார். (க)


# உடனடி வேலைவாய்ப்பு

**எலக்ரிசன், பிளம்பர், எலக்ரோனிக்** ஆகிய வேலைகளுக்கு வெற்றிடங்கள் உண்டு.

தொழில்நுட்பக் கல்லூரிச் சான்றிதழ் மற்றும் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தொழில் பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.

12, 13, 14.09.2004 ஆகிய திகதிகளில் காலை 9.00 மணி முதல் நேரில் சமுகந்தரவும்.

**மனிதவள முகாமையாளர்**
**உதயன், யாழ்ப்பாணம்.** (சி-37631)(30-12-15)



5th HAPPY BIRTHDAY

# 5ஆவது பிறந்தநாள் வாழ்த்து

12 - 09 - 2004

நோர்வே சன்ட்விக்காவைச் சேர்ந்த ரவீந்திரன் - திலகராணி தம்பதியினரின் ஏகபுத்திரி

# ஷாலிக்கா



இன்று தனது ஐந்தாவது பிறந்தநாளை யாழ்ப்பாணத்தில் Peninsula Restaurant இல் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சிமார், அக்காமார், அண்ணாமார், தம்பிமார், தாத்தாமார், பாட்டிமார் மற்றும் உற்றார், உறவினர்கள் ஸ்ரீ முத்து வைரவர் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

S.ரவீந்திரன்
9/12, திருமகள் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம். T.P:776 116599

(36323)(22-12-15)


# மரண அறிவித்தல்கள்

## மரியதாஸ் ஜேசுதாஸ்



ஏழாலையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனை வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாஸ் ஜேசுதாஸ் 07.09.2004 அன்று மரணமாகிவிட்டார்.

அன்னார் சகுந்தலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மரியதாஸ் - தவமணி தம்பதிகளின் அருமை மகனும் இராசலிங்கம் - பூமலரின் மருமகனும் ஜெனிற்றன், ஜெனிற்றா, டெனிலா, டெனிஸ்கெபின், லகுறா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் சிறிகாந்தன் (கனடா), உதயகுமார் (சுவிஸ்), உதயகுமாரி (ஜேர்மனி), சிவகுமார் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் கலா (கனடா), ரவீந்திரன் (ஜேர்மனி), சிவமதி (சுவிஸ்), தர்சா (கனடா) ஆகியோரின் சகோதரரும் கயானா, ரஜீப், ரஜீத்தா, சுரேன் (ஜேர்மனி) ஆகியோரின் பெரியப்பாவும் கோபிரமணன், சத்தியரமணன், கோகிலன் (கனடா), சகானா, சர்மினி, சர்வின் (சுவிஸ்), சிந்துஜா (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 14.09.2004 செவ்வாய்க்கிழமை 10.00 மணியளவில் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*ஏழாலை வடக்கு,*
*காளிகோயில் வீதி,*
*ஏழாலை.*

(36329)(38-12-18)

தகவல்:
**மனைவி, மாமன்,**
**மக்கள், மருமக்கள்.**

## சதாசிவம் அப்புத்துரை

**(ஓய்வுபெற்ற தபால் திணைக்கள ஊழியர், சுன்னாகம்)**



ஏழாலையைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட சதாசிவம் அப்புத்துரை நேற்று (11.09.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சொர்ணரத்தினத்தின் அன்புக் கணவரும், சுகந்தினி, சிறீரஞ்சன் (சுவிஸ்), காலஞ்சென்ற அருள்ரஞ்சன் மற்றும் கிருஸ்ணரஞ்சன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகாலிங்கம், எஸ்தர் மனோராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் தயாளலிங்கம், சுபோதினி, கோகிலா, ஜோர்ஜ் றொசாந் (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2004) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்திற்குத் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மானிப்பாய் மேற்கு,*
*மானிப்பாய்.*

(36332)(38-12-18)

தகவல்:
**சொர்ணரத்தினம்**
**(மனைவி).**

## இளையதம்பி நாகராசா



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி நாகராசா அவர்கள் 10.09.2004 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயசிறிலினின் அன்புக் கணவரும் கோமளா, பிறேமினி, ஜனார்த்தனன், மதுபாலன், சுறாணி ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2004) ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காந்தாளம் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*நுணாவில் மேற்கு.*

(36347)(38-12-18)

தகவல்:
**து.வரதன் (மைத்துனன்).**

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

*அன்னை மடியில்*
*16 – 12 – 1940*



*இறைவன் திருவடியில்*
*15 – 09 – 2001*

## திருமதி கோகிலம் சோமசுந்தரம்

**(இளைப்பாறிய ஆசிரியை)** (திதி : திரயோதசி)

ஆண்டுகள் மூன்று ஆனாலும்
ஆறுமோ எம் துயரம்
மீண்டும் எப்போது அம்மா
உங்கள் அன்பு முகம் காண்போம்.
ஆலமரமது போல் நிழல் தந்த அம்மாவே!
அலைமோதிக் கரை ஒதுங்கி கலங்கி அழுகின்றோம்
அரவணைக்க நீவிர் வரும் நாள் எந்நாளோ!

113, பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (36325)(38-12-18)

**கணவர்,**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**


**நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு**

**Dialog Gsm**

Kit தொலைபேசி அட்டைகள்
Sim இணைப்புகள்
வாங்கும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அளப்பரிய அன்பளிப்புகள்.

SRI MURUGAN
TELECOMMUNICATION &
AGENCY POST OFFICE
303, K.K.S. ROAD, JAFFNA.
T.P.: 021 222 5392

மேலதிக விவரங்கள் நாளைய உதயனில்...

(சி-37629)(38-12-18)


# மரண அறிவித்தல்

## திருமதி கந்தசாமி புனிதவதி

மசாலை மேற்கு, பங்களா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தசாமி புனிதவதி நேற்று (11.09.2004) சனிக்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா அன்னம்மாவின் சிரேஸ்ட புத்திரியும் காலஞ்சென்ற செ.கந்தசாமியின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசபூபதி, கமலாதேவி, காலஞ்சென்ற திலகவதி, புஸ்பவதி, காலஞ்சென்ற கைலாசபதி, சிறிபதி, கருணாபதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவசம்பு, கந்தையா, காலஞ்சென்ற ஆனந்தி, ஜெயந்தி, இந்துமதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சுகந்தினியின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.09.2004) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு மீசாலை.*

குடும்பத்தினர்.

(சி-37628)(38-12-18)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



**அமரர்**

## இராசரத்தினம் கேசவன்

நாளை (13-09-2004) திங்கட்கிழமை காலை நடைபெறுகின்ற வீட்டுக்கிருத்தியம், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கம்பர்மலை,
வல்வெட்டித்துறை. (36339) (26-12-18-38) - **குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் முனைப்பை அரசு கைவிடவேண்டும் தமிழ்க் காங்கிரஸ் கட்சி கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.12

தமிழ் மக்கள் மீது மீண்டும் ஒரு யுத்தத்தைத் திணிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதை அரசு உடன் நிறுத்தவேண்டும். இவ்வாறு அவசர கோரிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் கட்சியின் தலைவர் அ.விநாயகமூர்த்தி தலைமையில் நடத்தப்பட்டது. அச்சமயம் இக்கோரிக்கையை வலியுறுத்தித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ தமிழினத்தினதும் அவர்களது ஏகப் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளினதும் பொறுமையைச் சோதிக்காது, விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாக சபையை வழங்குவதை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிக்கவேண்டும். காலத்தை வீணே கடத்தியும் தேவையற்ற வார்த்தைப் பிரயோகங்களை சல்லாபித்தும் மீண்டும் தமிழ் மக்கள் மீது யுத்தத்தைத் திணிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருவதை நிறுத்தவேண்டும் என்று அரசைக் கோருதல் -

★ மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் வரை இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதை ஜப்பானிய அரசு இடைநிறுத்தவேண்டும் என்று ஜப்பான் அரசிடம் கோருதல் -

★ மட்டக்களப்பில் விடுதலைப் புலிகள் இயக்கப் பொறுப்பாளர்களான பாவா, யோகா கொலை செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டித்தல். (ஐ-3)

## இறால் வளர்ப்புப் பற்றி ஆராய்வதற்குக் குழு யாழ். வந்தது

யாழ்ப்பாணம்,செப்.12

யாழ். குடாநாட்டில் இறால் பிடிக்கும் கரையோரப் பகுதியில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவென தேசிய நீரியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய உத்தியோகத்தர்கள் நால்வர் அடங்கிய குழு யாழ். வந்துள்ளது.

கரையோரப் பகுதிகளில் இறால் பிடிக்கும் இடங்களை ஆராய்ச்சிசெய்து அவ்வாறான இடங்களில் இறால் வளர்ப்பை மேற்கொள்வது தொடர்பான நடவடிக்கைகளில் இக்குழு ஈடுபடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தேசிய நீரியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலைய ஆராய்ச்சி உத்தியோகத்தர் கலாநிதி பி.ஏ.ஜே.ஏ.ஜெயவர்த்தன, உதவி உத்தியோகத்தர்களான எம்.ஜி.கே.குணவர்த்தன, எச்.ஏ.ஆர்.ஈ.பெரேரா மற்றும் ரி.உபசேன ஆகியோரே இக்குழுவில் இடம்பெற்றுள்ளவர்களாவர். (8-6)

## ஓய்வூதிய அதிகரிப்பு வழங்க ஏற்பாடு

தென்மராட்சி,செப்.12

வெளிநாடுகளில் தற்போது தங்கியுள்ள தென்மராட்சிப் பிரதேச ஓய்வூதியர்களுக்கு அதிகரித்த ஓய்வூதியத்தினை வழங்க பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையினர் தற்போது ஏற்பாடுகளைச் செய்துவருகின்றனர்.

வெளிநாடுகளிலிருந்து இங்குள்ள வங்கிகள் மூலம் ஓய்வூதியம் பெறும் 78 ஓய்வூதியர்களின் விவரங்கள் பெறுவதற்கான படிவங்கள் ஓய்வூதியக் கிளையினரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பிரதேசத்தைச் சேர்ந்த விதவை ஓய்வூதியம் பெறுவோர் தவிர்ந்த ஏனைய குடிசார் (சிவில்) ஓய்வூதியர்களில் தகுதியானவர்களுக்கு அதிகரித்த ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-117)

## கடன் திட்டம் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம்,செப்.12

தேசிய வீடமைப்பு அதிகார சபை வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் கடந்த 8 மாதங்களில் ஒரு கோடியே 20 லட்சம் ரூபா நிதியினை யாழ். மாவட்ட மக்களுக்கு வழங்கியுள்ளது.

சபையின் யாழ். மாவட்ட முகாமையாளர் எஸ்.மாசிலாமணி இதனைத் தெரிவித்துள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு வீட்டின் உரிமையாளர்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபா வீதம் கடனாக வழங்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.

இதேவேளை -

வீடமைப்புத் திணைக்களத்திடமிருந்து கடந்த காலங்களில் கடன்களைப் பெற்றுக் கடன் நிலுவைகளை மீளச் செலுத்தாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (4-7)

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் பயணஞ்செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை, தாய், இரு பிள்ளைகள் ஆகியோரே உயிரிழந்தனர்.

ஓட்டோச் சாரதி படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் கண்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-3)

## அகாஷி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை விஜயத்தின்போது அவர் ஜனாதிபதி மற்றும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்திப்பார்.

இலங்கையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் ஜே.வி.பியின் நிலைப்பாட்டை அறிவதில் அவர் முக்கிய கவனம் செலுத்துவார் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ-3)

## விபத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துச் சபை பஸ் ஒன்று 3ஆம் கட்டையில் நிறுத்தப்பட்டபோது அதன் பின்னால் வேகமாக வந்துகொண்டிருந்த மினிபஸ் ஒன்று போக்குவரத்துச் சபை பஸ்ஸை விலத்தி முன்னே செல்ல முயன்றது என்றும் -

அச்சமயம் எதிர்த்திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று அந்த மினி பஸ்ஸுடன் மோதியது என்றும் கூறப்படுகிறது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர் அதிலிருந்து பாய்ந்து ஒருவாறு தப்பிவிட்டார். ஆனால் மோட்டார் சைக்கிள் பலத்த சேதமடைந்திருந்தது. இந்த விபத்தையடுத்து ஆத்திரமடைந்த சிலர் மினி பஸ்ஸின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கினர். (ஐ-3-180)

## கச்சதீவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் பின்னர் நேற்று யாழ். செயலகத்துக்குக் கூட்டிவரப்பட்டிருந்தனர்.

18 குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் இவர்களில் அடங்குவர். இவர்களில் 16 பேர் பெண்கள், 6 பேர் ஆண்கள், 6 பேர் சிறு பிள்ளைகளாவர்.

போக்குவரத்துச் செலவாக ஒரு குடும்பத்துக்கு ஆயிரம் ரூபாவும் தனியாள்களுக்கு 500 ரூபாவும் செயலகத்தால் வழங்கப்பட்டது.

திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து யாழ். செயலக அதிகாரியால் முகமாலை வரை அழைத்துச் செல்லப்பட்டனர். பின்னர் அங்கிருந்து சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ஐ-3-202-203)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைமைப்பீடம் பரிசீலித்து வருவதாகவும் அதனை ஏற்பதில்லை என்று கட்சி முடிவு செய்திருப்பதாகவும் கட்சியுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்தன.

உத்தேச ஆலோசனைக் கவுன்ஸிலுக்கு இணைத் தலைவர்களாக எதிர்க்கட்சித் தலைவரையும் பிரதமரையும் நியமிக்க ஜனாதிபதி திட்டமிட்டிருக்கிறார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் தகவல் வெளியாகியிருக்கின்றது.

இத்தகைய பதவி ஒன்றை ரணில் விக்கிரமசிங்க ஏற்றுக்கொள்வாரா எனக் கேட்டபோது, 'கட்சி ஒருபோதும் அதனை ஏற்காது' என்று கட்சிப் பிரமுகர் ஒருவர் கூறினார்.

கட்சிகள், மதத்தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்துவது என்ற சாக்கில் சமாதானப் பேச்சுக்களைத் தொடங்காமல் காலத்தை இழுத்தடிக்க ஜனாதிபதி முயற்சிப்பதையே இந்த யோசனை எடுத்துக்காட்டுகின்றது என்றும் அந்தப் பிரமுகர் குற்றஞ் சுமத்தினார்.

"விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை உடனடியாக ஆரம்பிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கிறது. அதற்காக பேச்சுக்களை ஆரம்பிக்காமல் காலத்தை இழுத்தடிக்கும் முயற்சிகளுக்கு கட்சி உடந்தையாக இருக்க மாட்டாது" என்றும் அவர் கூறினார். (ஐ-3)


**புத்தகப் பிரியர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

நல்லூரில்
"புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்"
காலம்: 11, 12, 13, 14 வரை
நல்லூர், பருத்தித்துறை வீதி,
(செட்டித்தெருவுக்கு முன்னால்)
தொடர்புகளுக்கு: தெ.ரவீந்திரன்
"கௌரி வாசம்"
இணுவில் மேற்கு.
0777 840318
(36303)

**A/L DAY CLASS**
*LOGIC*
By: E.S.பவன்
B.A.(Hons)
ஆரம்பம்:
13.09.2004
காலை 9 மணி
ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்.
(36341)

**வணிகக் கல்வி**
A/L-2005 Day Paper Class
★ கடந்தகால வினாககள்.
★ மாதிரி வினாக்கள்.
By: திரு.S.யசோ
ஆரம்பம்:
13.09.2004
mon.-8.30 - 9.30
(S.L.T.)
ஸ்ரார் கல்வி நிலையம்
சுன்னாகம்.
(36340)

**A/L 2006**
இணைந்த கணிதம்
'எல்லைகள், வகையீடு'
By:N.M.கோணேஸ்
ஆரம்பம்:
13.09.2004
மாலை 5.00 மணி.
வீனைல்ஸ் கல்வி நிலையம்.
சுன்னாகம்.
(36342)


**நூல் வெளியீடு**
பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் எழுதிய
"பழையதும் புதியதும்"
இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிப் பிரிவு
(யாழ். வைத்தியசாலை முன்பாக)
காலம் : 13-09-2004 பிற்பகல் 4.00 மணி.
தலைவர் : திரு. N.A.விமலேந்திரன்
(அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி)
பிரதம விருந்தினர்கள்:-
பேராசிரியர் கலாநிதி இரா.மோகன்
(மதுரைக் காமராசர் பல்கலைக்கழகம்)
பேராசிரியை கலாநிதி திருமதி நிர்மலா மோகன்
(செந்தமிழ்க் கல்லூரி மதுரை பல்கலைக்கழகம்)
நிகழ்ச்சி :-
அகவணக்கம், தமிழ் வாழ்த்து, வரவேற்புரை, தலைமையுரை.
அறிமுகவுரை :- கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா
வெளியீட்டுரை :- பேராசிரியர் இரா.மோகன்
முதற்பிரதி பெறுதல் :- பேராசிரியர் எஸ்.மோகனதாஸ்
(துணைவேந்தர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
நயப்புரை :- பேராசிரியை கலாநிதி நிர்மலா மோகன்
மதிப்பீட்டுரை :- பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்
(தலைவர், தமிழ்த்துறை)
பதில் உரை :- பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன்
நன்றி உரை :- வண. G.நடராசா
உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
இவ்வண்ணம்
C.I.S.R.S. நிறுவனத்தினர்.
(36333)(30-15-18)

**உடன் தேவை**
சிற்றூழியர்கள், தோட்ட வேலையாள்கள் உடன் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். நேரில் வரவும்.
மனிதவள சேவை
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**CATWAS. COM**
Computer Academy T.P 021-2223805
No.26, Somasundram Avenue, Chundukuli, Jaffna.
Diploma Courses புதிய பிரிவுகள்
Ms Office 2003 1750/=
D.T.P. 2000/=
Hardware 1500/=
Video Mixing 2500/=
Web Page 3000/=
அறிவோடு விளையாடுங்கள்
Kids Programme
சிறுவர்களுக்கான மாலை நேர கணனி வகுப்புகள் ஆரம்பம்.
Certificate Courses நடைபெறுகின்றன.
☞ Ms Office பாடநெறியினை மேற்கொள்வோருக்கு மட்டும் அனுமதிக் கட்டணம் இலவசம்.
☞ Ms Office பாடநெறியில் கற்கும் மாணவருக்கு Internet & E-Mail இலவசம்.
(சி-37568)


**மரண அறிவித்தல்**

**செல்லையா பஞ்சாட்சரம்**



பெரியமாவடி, சாவகச்சேரியைச் சேர்ந்த செல்லையா பஞ்சாட்சரம் நேற்று (11.09.2004) சனிக்கிழமை மாலை காலமானார்.

அன்னார் செல்லையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்)

*உப்புக்கேணி வீதி,*
*பெரியமாவடி,*
*சாவகச்சேரி.*

தகவல்:
ப.ஜெயக்குமார் (மகன்),
பொ.நந்தன், த.சின்னத்தம்பி
(மருமக்கள்).

(36352)(30-15-18)






இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org